உ
கடவுள் துணை

# செந்தமிழ்

| தொகுதி சுய | திருவள்ளுவர் ஆண்டு 1996 | பகுதி கய-கஉ |
| --- | --- | --- |
| Vol. 60 | சோபகிருது—தை to பங்குனி<br>1965 January to March | No. 10—12 |


# தொடரியலில் ஒரு சிக்கல்

இராம. சுந்தரம், எம். ஏ.

டெக்கான் கல்லூரி, புனே.

சில நாட்களுக்கு முன் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் ஒரு முற்றுத் தொடர் (sentence) கீழ்கண்டவாறு அமைந்திருந்தது:- "நான் கஷ்டப்பட்டுப் படித்து இவ்வளவு நாட்களாகியும் நான் இன்னும் ஒரு நிலையான வேலையில் அமரவில்லை." இத்தொடர் தமிழ்மரபோடு பழகிய உள்ளத்துக்கும் செவிக்கும் புதுமையாகத் தெரிந்தது. நம் மொழி மரபிற்கு மாறுபட்டிருப்பது போலவும் தென்பட்டது. இத் தொடரில் உள்ள பயனிலையான "அமரவில்லை" என்பதற்கான எழுவாய் "நான்" என்பதாகும். இந்த 'நான்' என்பது இரண்டு இடங்களில் பயின்று இத் தொடரை மரபுநிலைக்கு எதிராக மாற்றியிருக்கிறது. "நான் கஷ்டப்பட்டுப் படித்து இவ்வளவு நாட்கள் ஆகியும் இன்னும் ஒரு நிலையான வேலையில் அமரவில்லை" என்றுவது, "கஷ்டப்பட்டுப் படித்து இவ்வளவு நாட்களாகியும் நான் இன்னும் ஒரு நிலையான வேலையில் அமரவில்லை" என்று

வது இருந்திருப்பின், அது மொழி மரபுக்கு ஒட்டியதாக வும், பொருளை ஒழுங்காக அறிவிப்பதாகவும் அமைந்திருக் கும். இரண்டு 'நான்'களில் ஒன்று மிகை. (redundancy) இது தற்காலக் கடிதத்தமிழில் நானு என்ருல், சங்க இலக் கியத் தமிழில் இதுமாதிரி உண்டு என்று குறுந்தொகை 300-வது பாடல் கூறுகிறது. அப்பாட்டு இது.

"குவளை நாறுங் குவையிருங் கூந்தல்
ஆம்பல் நாறுந் தேம்பொதி துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமரைக் கொங்கி னன்ன
நுண்பல் தித்தி மாஅ யோயே
நீயே, அஞ்ச லென்றவென் சொல்லஞ்சலையே
யானே, குறுங்கா லன்னங் குவவுமணற் சேக்கும்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூ ழலன்யான் நின்னுடை நட்பே" *

இப்பாட்டின் கடைசி மூன்று வரிகளே நம் ஆராய்ச் சிக்கு உகந்த பகுதி. பயனிலையாக உள்ள "சூழலன்" என் பது தன்மை ஒருமை எழுவாயான 'யான்' என்பதைக் கொள்கிறது. 6 வது வரியின் தொடக்கம் காட்டும் 'யானே' என்பது எழுவாயானுல், கடைசிவரியில் 'சூழலன்' என்பதை அடுத்து நிற்கும் 'யான்' மிகையாகக்கொள்ளப்படவேண் டும். எழுவாய், பயனிலை ஆகியவை ஒரு முற்றுத் தொடரில் எவ்விடத்தில் அமையவேண்டும் என்ற முறையை (order) தமிழில் வரையறுக்கப்படவில்லை. 'நான் வந்தேன்' என்றோ. 'வந்தேன நான்' என்றோ சொல்லவும், எழுதவும் மொழி

*[பார்க்க: "சங்க இலக்கியம்", சைவசிந்தாந்த மகாசமாஜப் பதிப்பு, பக்கம் 642-43. சென்னை, 1940]

இடந்தருகிறது. அப்படிப்பார்க்கையில் 'சூழலன்' என்பதை அடுத்துள்ள 'யான்' எழுவாய் ஆகும் என்று சொல்லத் தோன்றும். எனின், முன் உள்ள 'யானே' என்பது மிகை என்று தள்ளப்படவேண்டும். இவ்வரிகள்,

"யானே, குறுங்கால் அன்னம் குவவு மணற்சேக்கும்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்,
விடல் சூழலன் நின்னுடை நட்பே"

என்றுவது,

"குறுங்கால் அன்னம்..............
......பெறினும் விடல்சூழலன் யான் நின்னுடை நட்பே'

என்றுவது இருத்தல் வேண்டும். இவ்வாறின்றி, இரண்டு யான்'கள் ஒன்று பயனிலைக்கு முன்பும், மற்றது அதற்குப் பின்பும், வந்து மொழி மரபை மாற்றுகின்றன.

இப்பாட்டில் முதலில் உள்ள 'யானே' என்பதை எழுவாயாகக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது. ஏனெனில், 5 வதுவரியில் "அஞ்சலையே" என்ற பயனிலைகு "நீயே" என்று அதன் முன் நிற்கும் சொல் எழுவாய் ஆகிறது. அதைப்போலவே இங்கும் "சூழலன்" என்பதற்கு முன் வரும் (இடத்தால் முன்) 'யானே' என்பது எழுவா யாகக் கொள்வது ஒரு பாங்கமாக (Pattern) அமையும். இதை ஏற்றுக்கொண்டால், இரண்டாவதாகஉள்ள 'யான்' வேண்டாது பெய்யப்பட்ட ஒன்றுகக் கொள்ளப்படலாம். இதே பாட்டைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரும் பதிப்பித்துள்ளனர். (கடைசி வரி மட்டும் கீழே தரப்படு கிறது)

"விடல்சூ ழலனன் நின்னுடை நட்பே"

இங்கு 'சூழலனுன்' என்று காணப்படுகிறது. இது, 'சூழலன் + நான்' என்றோ, சூழலன் + ஆன் என்றோ பிரிபட லாம். 'நான் என்ற சொல் பிற்கால வழக்கு ஆதலின் முதல் பிரிப்பு (segmentation) பொருந்தாது. இரண்டாவது பிரிப் பின்படி 'ஆன்' என்பது அசையாக்கப்படவேண்டும். (எ-டு) 'கூதிர்நின்றன்றாற் போதே'-நெடுநல்வாடை இங்கு 'ஆல்' அசை. 1) உரையாசிரியர் சோமசுந்தரம் அவர்கள் 'ஆன், நான்' பற்றி எதுவும் உரையில் குறிப்பிடவில்லை 2) 'விளக்கம்' என்ற பகுதியில் 'கடல்சூழ் மண்டிலம் பெறி னும் விடல் சூழலன் யான் நின்னுடை நட்பே' என்றான் என்று குறிக்கிறார். ஆகவே, 'யான்' என்றே பாடம்கொள்வ தாகத் தெரிகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால், பாட்டில் 'யான்' என்பது (அவர் உரை எழுதியுள்ள கழகப் பதிப்பில்) இல்லை. 3) பாட்டு ஒன்றாக இருக்க, உரைப் பாடம் வேறொன்றாக இருக்க, அதனால் குழப்பம் ஏற்பட்டு அவர் இரு எழுவாய்கள் வந்துள்ள நிலையைக் கவனிக்கத் தவறிவிட்டார்.

மேலே தந்த 3 காரணங்களும் இரண்டாவது பிரிப்பை ஏற்றுக்கொள்ளத் துணையாக நிற்கின்றன ஆகவே சமாஜப் பதிப்பை ஆதாரமாகக்கொண்டு நோக்கும்போது இவ்விரு எழுவாய் வரவு இவ்விடத்தல் மொழி மரபுக்குப் பாக நிற்பது போதரும்.

இம்மாதிரிச் சிறைக்குடி ஆந்தையார் (இவரது பிற பாடல்கள்: குறுங். 56, 57, 62, 132, 168, 222, 273) நற் 16) எழுதக் காரணம்என்ன? மொழியியல் (linguistic) அமைப்பு (stnecture)ப்படிக் காரணம் எதும் சொல்லத் தோன்ற

வில்லை. ஆனால் மொழிப்புறக் காரணம் (extra linguistic reason) ஒன்று மட்டும் சொல்லலாம். தலைவன் தலைவியைத் தெளிவிக்க விரும்புகிறான். தான் உரைத்த பிரிவுச் செய்தி கேட்டு பயந்து நிற்கும் அவளுக்குத் துணிவு பிறக்கும் வகையில் செய்தியும் சமாதானமும் சொல்ல முயலுகிறான். ('இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிவச்சமும் வன்புறையும் கூறியது' என்ற துறையாகும் இப்பாட்டு) அவள் உள்ளத்தில் அச்சமின்மையைத் தோற்றுவிக்கும் பொறுப்பு அவன்பால் உள்ளது. ஆகவே தானும் அந்தப் பொறுப்புணர்ச்சிக்கு ஏற்பப் பேச முற்படுகிறான். அந்த உணர்ச்சிதான் அவனை இம்மாதிரித் தமிழ் எழுத்து மரபை மீறிப்பேசச் செய்கிறது. அவளைச் சமாதானப்படுத்தித் தைரியம் சொல்லவேண்டும் என்ற ஒரே நோக்கம் அவன் உள்ளத்தில் குடிஏறியதால் அவன் எழுத்து மரபில் மாறிப் பேச்சுமரபில் நின்று சொல்கிறான். இவ்விளக்கம் சங்க இலக்கியப் பாடல்களில் பேச்சுவழக்குச் செல்வாக்கும் உண்டு என்பதைக் காட்டும் சான்றாகும்.

மேலும் ஒரு எடுத்துக்காட்டு:—

கலித்தொகையில் உள்ள 'சுடர்த்தொடீஇ கேளாய்' என்ற பாட்டின் போக்கும் பேச்சுத்தமிழின் செல்வாக்கைக்காட்டும். இதைப்போலவே, பல அகப்பாடல்கள். இவ்வாறு, மொழி அமைப்பைபற்றிய நினைவின்றி (unconscious), உணர்ச்சி ஒன்றே குறியாகக் கொண்டு எழுதுவதால் பாட்டில் ஒரு நெருக்கமும், மெய்ம்மையும் (realisom) இருப்பது புலப்படும். ஆசிரியர் முன் பயந்து

நிற்கும் மாணவன் "நான்......நான் வந்து...சார்......நான்" என்று சொல்லுவதன்மூலம் பய உணர்ச்சியை வெளிப் படுத்தக் காணலாம்.

இச்சான்றுகளைக் காணும்போது எழுதும் போதுள்ள சிந்தனைக்கும், கையாளப்படும் மொழிப்போக் கிற்கும் மாறுபட்ட நிலை பேச்சு வழக்கில் இடம் பெறுதல் உண்டு என்பதை உணரலாம். 'அக்கா வந்துச்சு' என்று கட்டுரையில் எழுதினால் அடிக்கும் ஆசிரியர், தம்வீட்டில் 'அக்கா வந்துச்சு'என்றே பேசுகிறார். 'அக்காள் வந்தாள்' என்தே சரியானதென உணரும் அவர், பேசும்போது பையன் கட்டுரையில் எழுதியதுபோலப் பேசுகிறார். பைய னிடம்காணாத இரண்டாட்டநிலை ஆசிரியரிடம் காணப்படுகி றது. இவ்வாறு எழுதுவது தவறு என்று சொல்லமுடி யாது. 'அக்கா வந்துச்சு' என்றாலும், 'அக்காள் வந்தாள்' என்றாலும் அவற்றைக் கேட்பவரால் தவறின்றிப் புரிந்து கொள்ள முடிகிறது. கருத்தை உணர்த்தத்தான் மொழி. மனிதன் மனப் பண்பின்படி மொழிமாறும். மனிதனுக்குத் தான் மொழியேயல்லாது, மொழிக்காக மனிதன் அல்ல. தலைக்குத்தான் குல்லாயே தவிர, குல்லாய்க்குத் தலையல்ல. இச்சிந்தனை தற்கால நாவல், சிறுகதை ஆசிரியர்களிடம் ஏற் பட்டுள்ளதால், அவர்களது எழுத்துக்களில் பேச்சுத் தமிழ் வழக்கைப் புகுத்தி அவற்றை மெய்ம்மை இலக்கியமாக மாற்றுகிறார்கள். தொல்காப்பியர்கூட இதை உணர்ந்த தால்தான் தம் இலக்கணப் பெருநூலில் பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ் வழக்குகள்பற்றி ஆங்காங்கே குறித்துச்

செல்லக் காண்கிறோம்.

மொழி அமைப்பை ஆராயும்போது இதுபோல மொழிப்புறச் செய்திகள் சிலவற்றையும் மனதில் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. பேராசியர் J. R. Firth என்பாரும் இதனைக் குறிக்கிறார்.* அவர் சொல்லும் சூழ்நிலைக் குறிப்பும் (Context of situation) சொல்பவனது இயல்பும் (Personality) இதையே உணர்த்துவதாகத் தோன்றுகின்றன.

—*○*—

*எது நன்று, எது தீது*
*என்று பகுத்தறிய இயலா வண்ணம்*
*மனிதன்*
*தன் அறிவுத்திறன் என்னும் வலையிலே*
*நன்றாக பின்னிக் கொண்டுவிட்டான்*
*எத்தகைய மனிதன்?*
*சூரியனின் கதிர்களையும்*
*சிறைப்படுத்திய மனிதன்*
*தன் வாழ்க்கை என்னும்*
*இருண்டு கிடக்கும் இரவுக்கு*
*ஒளி உண்டாக்க முடியாதிருக்கிறான்.*

**—கவி இக்பால்**

---

* J. R. Firth, "Personality and language in Society," in Papers in Linguistics, 1934-1951, Pp. 177-189, oxford university press.

# தொல்காப்பியத்தில் ஒரு நூற்பாவின் விளக்கம்

—❋○❋—

பண்டித: சித. நாராயணசாமி,

அறுபத்துமூவர்மடம், திருவையாறு.

(முற்றொடர்ச்சி)

**பண்புகொள் பெயர்க்கொடை**

'இனச்சுட்டில்லா' என்னுமிந் நூற்பாவின் கண் 'பண்புகொள் பெயர்' என்றாலும் பண்புகொள் பெயர்ச் சொல்லென்பது விளங்குவதாக இருக்க, 'பண்புகொள் பெயர்க்கொடை' என்று கூறியதெதற்கு என்னில், 'பண்பு கொள் பெயர்' என்று கூறின், 'நிலப்பெயர் குடிப் பெயர் குழுவின் பெயரே, வினைப் பெயருடைப் பெயா 'பண்பு கொள் பெயரே'(தொல்-சொல்-பெயர்-பக) என்பதனானும் 'பண்புகொள் பெயரு மதனோரற்றே' (தொல்-சொல்-விளி -203) என்பதனானும் பிறவற்றானுங் குறிப்பிடப்படும் 'கரியன்' என்பதுபோலவரும் பண்புகொள் பெயர்களைக்கொள் ளினுங்கொள்ளனேரும். அவ்வாறு கொள்ளாமல், 'செந்தாமரை' என்பதுபோலவருவனவற்றையே கொள்ளல்வேண் டும்! அவற்றையே இங்கெடுத்தாய்ந்து கூறுகின்றன மென்பார் வேற்றுமை தோன்ற 'பண்புகொள் பெயர்' என்னாது 'பண்புகொள் பெயர்க் கொடை' என்றனராசிரியரென்க.

ஆசிரியர் கருத்துணர்ந்து சேனாவரையர், பண்பு

கொள் பெயர்கொடை’ என்பதற்குப் பண்புகொள் பெயர்’ என உரையெழுதாமல் ‘பண்படுத்து வழங்கப்படும்பெயர்’ என வுரையெழுதுவாராயினரென்க.

**பெயர்க்கொடை.**

பெயர் = பொருள். சொற்கள், பொருளுணர்ச்சி, தொழிலுணர்ச்சி முதலிய் வுணர்ச்சியைத் தருதலால் ‘சொடை’ எனப்படும். இங்குப் பொருளுணர்ச்சியைத் தருவது என்னும் பொருள்பட ‘பெயர்க் கொடை’ எனப் பட்டது என்க.

இங்குப் பெயர்சொல்லைப் ‘பெயர்க் கொடை’ என ஆசிரியர் கூறியதுபோலப் பொருளதிகாரத்தில் மரபியலில்,

‘குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க் கொடை (19)

எனவும்,

‘சேவற் பெயர்கொடை இறகொடு சிவனும்’
மாயிருந்தூவி மயிலலங்கடையே’ (408)

எனவும்.

‘ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை,
பெட்டை யென்னும் பெயர்க் கொடைக் குரிய’ (502)

எனவும்,

‘பன்றி புல்வாய் நாயென மூன்றும்
ஒன்றிய பிணவென் பெயர்கொடைக் குரிய’ (508)

எனவும்,

வரும் பல நூற்பாக்களில் பெயர்க்கொடை என வழங்கியிருத்தலையுங் காண்க.

இந்நூற்பாக்களில் வேற்றுமை தோன்ற அவ்வாறு கூறினரல்லரெனினும் ‘எல்லாச் சொல்லும் பொருள்குறித்

தனவே' எனக் கருவி கருத்தாவாகக் கூறி, 'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும், சொல்லினுகு மென்ம னுர் புலவர்' எனக் கருவி என்பது தோன்றக் கூறிய சொற் களினிலைமையை நினைப்பிக்கவும் பெயர் என்பது பொரு ளைக் குறிப்பதற்குரியதன்றிச் சொல்லைக்குறிப்பதற்குரியதா காது என்பதையறிவுறுத்தற்கும் 'பெயர்க்கொடை' என்ற னர் என்க.

இனிச் சொற்கள் பொருளையுணர்த்தும் என்பது இன்னபொருள் என்னுமுணர்வை யளிக்கும் என்பதாம். அத்தன்மை தோன்ற பெயர்க்கொடை என்றனர் எனல் சாலும். சொல், பொருளுணர்வைத் தரும் என்பது நன்கு கத்தோன்ற 'கலையென் காட்சியுழைக்கு முரித்தே (தொல்- பொருள். மரபு-408) என்பதில் 'காட்சி' என ஆண்டன ரென்க. காட்சிதருவதனைக் காட்சி யென்றனர். காட்சி = அறிவு.

இனச்சுட்டில்லா

பெயர்ச்சொற்கள் பண்படுத்து வழங்கப்படுவது, இனத்தைச் சுட்டிவருவதற்கே யாமென்பார் 'இனச்சுட்டில் லாப் பண்புகொள் பெயர்க்கொடை' என்றனராசிரியர்.

ஆசிரியர் கருத்தையுணர்ந்து சேனவரையர் அதற்கு 'இனத்தைச் சுட்டுதலின்றிப் பண்படுத்து வழங்கப்படும் பெயர்' எனவுரை யெழுதினர்.

இங்கு இனத்தைச் சுட்டிவருவது பண்புச் சொல் லன்று பண்புகொள் பெயரேயாம் என்பார் 'இனச்சுட்டில் லாப் பண்பு' என்னுமல் 'இனச்சுட்டில்லாப்பண்புகொள்

பெயர்க்கொடை' என்றனராசிரியரென்க.

**இனஞ்சுட்டல்**

இங்கு இனஞ்சுட்டலாவது எனச் சேனாவரையர் எழுதியது 'பண்புகொள் பெயர் இனஞ்சுட்டலாவது' என்னுங் கருத்துடன் எழுதியதாகும். பண்புகொள் பெயர் இனஞ்சுட்டல் என்பதன் பொருள் யாது என்னுங் கேள்விக்கு விடையாகச் சேனாவரையர் 'இனஞ்சுட்டலாவது, இனத்தைச் சுட்டியவற்றினின்றும் விசேடிக்கப்படுதல்' என எழுதினர்.

பண்புகொள்பெயரானது, இனத்தைக்குறித்து அவ்வினப்பொருளை யுணர்த்தாமனிக்கிச் சிறப்பிக்கப்படுதல் என்பதன்பொருளாகும்.

பண்புகொள் பெயர் எதற்காகப் பண்புச் சொல்லைக் கொண்டதென்றால், இனமுள்ளனவெனக்காட்டி அவற்றை யுணர்த்தாமனிக்கிச் சிறப்பிக்கப்படுவதற்காகுமென்தாம்.

இனமான பொருள் ஒன்றற்கு ஒன்றாகவும் ஒன்றற்குப் பலவாகவும் இருத்தலால் எல்லாமடங்க அவற்றினின்றும் எனவும் இனம் என்பது சாதி யொருமைச் சொல்லாதலால் இனத்தை என அத்துச்சாரியையிட்டும் சேனாவரையர் எழுதினர் என்க.

சாதியொருமைச் சொல் சாதியொருமையையுணர்த்தவே அச்சாதி, ஒருமை பன்மைப் பொருளெல்லாவற்றினுமிருத்தலால் அச்சொல் ஒருமை பன்மை எல்லாவற்றிற்கும் பொதுச்சொல்லாக ஆகும். ஆதலால் அவற்றினின்றும் எனப்பன்மைச் சொல்லாற் சுட்டுவது குற்றமாகாதெனக்

காணல்வேண்டும். சாதி=பொதுத்தன்மை.

இனத்தைச் சுட்டி = ஒன்றும் பலவுமாகிய இனங்களைச்சுட்டி, அவற்றினின்றும் விசேடிக்கப்படுதல் அவற்றையுணர்த்தாமனீக்கிச் சிறப்பிக்கப்படுதல்

**விசேடிக்கப்படுதல்.**

விசேடிக்கப்படுதல் = பொதுவாக நில்லாமல் ஒன்றற்குரியதாகச் சிறப்பிக்கப்படுதல். செந்தாமரை என்னுமிடத்துத் தாமரை யென்பது பொதுவாக நில்லாமல் செந்தாமரைப் பொருளையுணர்த்துவதற்காகச் செம் என்னும் பண்புச்சொல்லைக்கொண்டு அதனால் சிறப்பிக்கப்படுவதாயிற்று என்க. சிறப்பிக்கப்படுவது = ஒன்றற்குரிய சொல்லாக ஆக்கப்படுவது.

பண்புகொள் பெயர் அப்பண்பால் ஒன்றற்குரியதாக ஆக்கப்படும்போது இனமிருத்தலைக் கருதியே ஆக்கப்படுதலால் அப்பெயர் இனமிருத்தலைக் காட்டுவதாகவும் அவ்வினத்தை யுணர்த்தாமல் நீக்கப்படுவதாகவுமாகின்றது.

**விசேடித்தல்**

விசேடிக்கப்படுதல் என்வே விசேடித்தல் பெறப்படுகிறது பண்புகொள்பெயரில் "பெயர் விசேடிக்கப்படுதலையுடையது. பண்பு விசேடித்தலையுடையது.

விசேடித்தல் = சிறப்பித்தல் அது செந்தாமரை என்பதில் செம் என்னும் பண்புச் சொல்லானது, தானடுத்த தாமரை என்னுஞ்சொல்லை, செம்மைப்பண்பில்லாதவெண்டாமரைப் பொருளை யுணர்த்தாமனீக்கிச் செந்தாமரைப் பொருளை, வரைந்து (அகப்படுத்தி) உணர்த்தும்படிசெய்

தலாகும். செம் என்னும் பண்புச்சொல் தாமரை யென்னுஞ் சொல்லை நீக்கி, வரைந்து செந்தாமரைப் பொருளை யுணர்த்தும்படி செய்தலாகும் எனக் கூட்டிப் பொருள் காண்க. இக்கருத்தைக்கொண்டே சேனாவரையர்,

> 'வெண்மை முதலாயின விசேடித்தலாவது...
> ...சுட்டுவித்த லன்றே'

என எழுதினாரென்க.

சுட்டுவித்தல் = உணர்த்தும்படி செய்தல், சுட்டுவது பண்புகொள் பெயராகும். சுட்டுவிப்பது, பண்புகொள் பெயரில் பண்பாகும். வரைந்து = பண்புச்சொல்லானது, தன்னாலுணர்த்தப்படும் பண்பையுடைய பொருளை, தானடுத்த பெயர்ச்சொல் உணர்த்தும்படி அச்சொல்லை அகப்படுத்தி, இங்கு வரைந்து என்பதற்குப் பொருளிதுவாதலால், வரைந்து என்பதற்குப் பொருளை வரைந்து எனப் பொருள் கொள்ளாமல் பண்புகொள் பெயரை அப்பண்புச்சொல் வரைந்து எனப் பொருள் கொள்க.

பெருங்கொற்றன் பெருஞ்சாத்தன் என்னும் பெயர்கள். பெருமை முன்னிலையாக வந்த பெயர்ச் சொற்களாகாமல் வழங்குதற்கு ஏற்பட்ட பெயர்களாகும்.

இப்பெயர்கள், செஞ்ஞாயிறு என்னுஞ்சொல், செந்நிறமுடைமை முன்னிலையாக வந்த பெயராயினும் இனஞ்சுட்டிச் சிறப்பிக்கப்படாமல் நின்றதுபோலப், பெருமைப் பண்பு முன்னிலையாக வந்தனவல்லவாகலான், இனஞ்சுட்டிச் சிறப்பிக்கப்படாமனின்றனவாகா. ஆதலால் அவை இங்கே அமைத்தற்குரியனவல்ல என்பார். 'சுட்டப்படுவதன்கண்......எண்டைக் கெய்தா' என்றனர். (முன்னிலை = காரணம்)

இவ்வுரைப் பகுதியில், 'சுட்டப்படுவதன்கண்' 'விசேடிக்கற்பாலது விசேடியாது நின்றதன்றாகலின்' 'ஈண்டைக் கெய்தா' என முன்னொருமையாகக் கூறிப் பின் பன்மையாகக் கூறியது பொருந்தாதெனில் 'பெருங்கொற்றன் பெருஞ்சாத்தன்......வழுவாயின' என எழுதியதற்கேற்ப 'ஈண்டைக் கெய்தா' என எழுதினர். மேலும் 'சுட்டப்படுவதன் கண் அக்குணமில்லையாயின் வரைந்து சுட்டுவிக்குமாறென்னை? அதனால் விசேடிக்கற்பாலது விசேடியாது நின்றதன்றாகலான் ஈண்டைக்கெய்தா என்னுந் தொடருக்கு, பெருங்கொற்றன் பெருஞ்சாத்தன் என்னும் எடுத்துக்காட்டுகளில் வரும் கொற்றன், சாத்தன் என்னும் பெயர்களாற் சுட்டப்படும் (உணர்த்தப்படும்) பொருளின் கண் அப்பெருமைப் பண்பில்லையானல் பெரு என்னுஞ் சொல்லிற்கு கொற்றன், சாத்தன் என்னும் பெயர்சொற்களையகப்படுத்தி (சிறப்புச் சொற்களாகஆக்கி) அவ்வப்பொருளை யுணர்த்தும்படி செய்தல் எவ்வாறு கூடும்? அப்பெருமைப்பண்பு அவ்வப்பொருளின்கண் இன்மையால் சிறப்பிக்கவேண்டிய பண்புச்சொல் சிறப்பியாமனின்றதன்று, ஆதலால், அவை (அப்பெருங்கொற்றன் பெருஞ்சாத்தன் என்னும் இல் குணமடுத்த பெயர்கள்) உள்குணத்தை யுணர்த்தும் பண்பைக் கொண்டபெயர்களைப் பற்றி யாய்ந்து கூறுமிந்நூற்பாவிற்குப்புலனாக வாரா என்பது கருத்தாகலான் ஒருமைபன்மை மயக்கமுற எழுதினாரில்லையெனக் காண்க.

'அவை யெய்தா' எனத் தோன்று எழுவாய்ச் சொற் கொணர்ந்து கூட்டிப்பொருள் காண்க.

சுட்டப்படுவது என்பது சுட்டப்படும் பொருள் எனவும் விசேடிக்கற்பாலது என்பது விசேடிக்கற்பாலதாகிய

பண்பு' எனவும் பொருள்படுதலால், அவை ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவான சொற்கள் ஆகும் என்பது வெளிப்படை.

இனிக் குறுஞ்சூலி குறுந்தடி என்பனபோல்வன பெருங்கொற்றன் என்பதுபோல வருவனவன்றிப் பண்பு கொள் பெயர்களாக வழக்கின்கண் இனஞ்சுட்டாது வருகின்றனவே என்பாரை நோக்கி, 'குறுஞ்சூலி குறுந்தடி என்னுந் தொடக்கத்தன......பெயரெனப்படா' என எழுதி அவைபற்றியிங்குக் கூறுவதற்கில்லையெனக் குறிப்பிட்டரெனக.

அவையும் அவைபோல்வனவும் பிரிந்து நில்லாமையால் இடுகுறிப் பெயராக வருவனவாகும். பிரிந்துநிற்பனவற்றை யிங்குக் கூறுகின்றாராதலால் பிரியாது ஒரே பெயராகவருமவற்றைபிங்குக் கூறுவதற்கில்லையென்பதாம்.

இனி 'வடவேங்கடம்' என்பது முதலிய பிற பெயர்களும் இனஞ்சுட்டாது வருகின்றனவே அவற்றை ஏன் எடுத்துக்கூறினாரில்லை யென்பாரை நோக்கி' 'பண்படாது...... ...கொள்ளப்படும்' என்றுகூறி அவைகளையுமிங்கே அமைத்துக்கொள்ளாமாகலின் வேறாகக் கூறினாரில்லை யென்றனர்.

ஒன்றனது ஆற்றலால் ஒன்று பெறப்படுதல் = வழக்காறல்ல என்பதனால் செய்யுளாறு என்பதும், செய்யுளாறென்பதால் வழக்காறல்ல என்பதும் அறியப்படுதல், (இது 'எடுத்தமொழியினஞ்செப்பலுமுரித்தே' என்பதனால் புலப்படும் என்க.)

(தொடரும்)

# "செய்ம்மன"

—○—

( மா. இளையபெருமாள் எம். ஏ., எம். லிட். )

1. 'செய்ம்மன என்னும் வாய்பாட்டுச்சொல்லை நச்சினர்க்கினியர் 'மன' ஈற்று எச்சம் எனக் கொண்டாலும், சேனவரையர் அதனை மன ஈற்று முற்று என்றும், கல்லாடனர் செய்ம்மன என்பது தெரிநிலை முற்றே என்றும் குறிப்பிடுகின்றனர்.

2. அது எதிர்கால முணர்த்தும் சொல் என்பதைச் சேனவரையரும் நச்சினர்க்கியரும் தரும் இலக்கண உரைகளும் தெய்வச்சிலையாரும் கல்லாடனரும் தரும் விளக்கங்களும் தெளிவு படுத்துகின்றன.

3. யான் உண்மன, நீ உண்மன முதலியவற்றிற்கு யான் உண்ணும், நீ உண்ணும் என்று நச்சினர்க்கினியருர், யான் செய்ம்மன, நீ செய்ம்மன, அவன் செய்ம்மன என்பன வற்றிற்கு முறையே யான் செய்வேன், நீ செய்வை, அவன் செய்வன் என்று கல்லாடனரும் பொருள் எழுதினலும், தெய்வச்சிலையார் "அது இக்காலத்துச் செய்வது, செய்வன, செய்பவை செய்யுமவை என வழங்கும் போலும்' என்று குறிப்பிடுவது, அது அஃறிணைச் சொல் என்பதையும், பெரும்பாலும் பலவின்பாற்பொருளையுடையது என்பதையும் விளக்குகின்றது எழுத்ததிகார உரையில் இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும் காட்டும் சான்றுகளாகிய

உண்மன குதிரை, செந்நாய், தகர், பன்றி ஆகியவை அது பலவின்பாற்சொல் என்ற கருத்தை வற்புறுத்துகின்றன.

4. உருபு நிலையிலும், பொருள் நிலையிலும் கருத்து வேறுபாட்டிற்கிடமளிக்கும் இச்சொல்லை 'இப்பொழுது வழக்கரிது' என்று இளம்பூரணரும் 'இறந்த வழக்கிற்று' என்று நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும் குறிப்பிட்டாலும்' தொல்காப்பியச் சொல்லதிகார முதற் சூத்திரத்தில் காணப்படும் 'இசைக்குமன' என்ற சொல்லை இங்கு குறிப்பிடவேண்டும். தெய்வச்சிலையார் இசைக்குமன் எனப்பாடங் கொண்டாலும் இசைக்குமன என்பது செய்ம்மன என்னும் தொழிற்பெயர்; அது செய்யுமன என விரிந்து நின்றது; அதுசொல் என்னும் பெயர்ப் பயனிலை கொண்டது என்று குறிப்பிடுகிறார். 'ஒலிப்பன சொல்லாவன' என்றும், 'செய்ம்மன' என்று பாடங்கொள்ளும் ஏனைய உரையாசிரியர்கள் 'மன் வினைபற்றிய அசை நிலை இடைச்சொல்' என்று குறிப்பிட்டாலும், 'சொற்கள் நிகழும்,' 'உணர்த்தும் சொற்கள்' என்றும் பன்மைப்பொருளியேயே உரை எழுதுகின்றனர் எனவே இசைக்குமன என்பது செய்ம்மன என்னும் வாய்பாட்டுச்சொல் என்று ஊகிப்பது பொருத்தமாகின்றது.

5. பதிற்றுப்பத்தில் காணப்படும் உண்மர், தின்மர் ஆகிய சொற்களை முறையே உண்+ம்+அர், தின்+ம்+அர் என்றும் பிரித்து அவைகளைப் பகுதி, எதிர்கால இடைநிலை, பலர் பால்விகுதி என்று அமைப்பதுபோலவேசெய்ம்மனஎன்றசொல்லையும் செய்+ம்+ம்+அன்+அ என்று பிரித்து அவைகளை முறையே பகுதி, சந்தி எழுத்து, எதிர்கால இடைநிலை, சாரியை, பலவின்பால்

விகுதி என்று காட்டுவது பொருத்தமாகும்.

6. பால்காட்டும் விகுதிகளுடைய சொற்களெல்லாம் பெயர்த்தன்மையுடையன ஆதலால், 'செய்ம்மன' என்பதும் அதற்கு விதிவிலக்கன்று என்பதை எழுத்ததிகார உரையில் நச்சினர்கினியர் காட்டும் யான் உண்மன கூழ், நீ உண்மன தேன், அவன் உண்மன பால் என்ற உதாரணங்கள் தெளிவுபடுத்துகின்றன. 'யான் உண்ணும் கூழ்' என்று நச்சினர்க்கினியரைப் போலக் கொள்வதைவிட, யான் உண்பனவாகிய கூழ் என்று விரிப்பது மிகவும் பொருத்தமாகும் புறநானூற்றிற்காணப்படும் 'செய்யுந்து' வாய்பாட்டுச் சொற்கள் செய் + உம் + து என எதிர்கால ஒன்றன்பாற் சொல் என்பதும், அவைகள் சொற்ருெடர் நிலையில் இங்கு குறிப்பிடும் அமைப்பையுடையனஎன்பதும் இங்கு நினைக்கத்தக்கவையாகும். அவ்வொன்றன்பாற் சொற்கள், அவற்றின் முதனிலையாகிய வினை நிகழும் இடத்தோடு இருபெயரொட்டாக நிற்பதைப்போலவே, நச்சினர்க்கினியரின் சான்றுகளில் முதனிலை வினையின் செயப்படு பொருளோடு இருபெயரொட்டாகத் தொடர்ந்து நிற்கின்றன.

7. மேற்குறிப்பிட்ட கருத்துக்களெல்லாம் செய்ம்மன என்பது உண்மர், இசைக்குமன, பாயுந்து முதலிய சொற்களைப் போன்ற அமைப்பையுடையது என்பதையும், அது எதிர்காலப் பலவின்பாற்சொல் என்பதையும், ஏனைய வினைமுற்றுக்களைப் போல வினையாலணையும் பெயராக முதனிலைவினையின் செயப்படு பொருளோடு இரு பெயரொட்டாகவும் நிற்கும் என்பதையும் விளக்குகின்றன.

# மெய்க்கீர்த்தி

—*○*—

இர. பன்னீர்செல்வம், எம். ஏ.

திருவனந்தபுரம்.

மெய்க்கீர்த்தி என்றால் என்ன? கல்வெட்டுக்கள்-செப்பேடுகள் இவற்றில் இதன் இடம் யாது? இதன் தோற்றம் எப்போது? என்ற சில வினாக்கள் தெளிவாக விளக்கப்படாமலேயே உள்ளன. இதைப்பற்றிக் கூறியவர்கள் ஓரிரு நூற்பாக்களைச் சான்றுகாட்டி. மெய்கீர்த்தியின் வடிவம் இதுதான் அல்லது இப்படித்தான் இருந்திருக்கவேண்டும் என்று கூறிப்போந்தனர். ஆயினும் மெய்கீர்த்தியின் அமைப்பு அவ்விலக்கணக்கூற்றுக்குச் சற்று மாறுபட்டுள்ளது. அவற்றை விளக்கமாக ஈண்டுக் காண்போம்.

மெய்க்கிர்த்தி பொருள் அமைப்பால் வடமொழியில் கூறப்படும் 'பிரசஸ்தி' என்பதனோடு பொருந்தமுடையதாகும். பிரசஸ்தி என்பது கற்பனைப்புனைவுகளுக்கு இடம் கொடுத்து காவிய நடையுடன் மிளிரும் தன்மைஉடையது' என்றும், மெய்க்கிர்த்தி அதனின் சிறிது வேறுபட்டதென்றும் கூறுவர். ஆனால் அது ஏற்புடையதன்று. ஏனெனின் புனைந்துரைகள் பிற்காலத் தமிழ்க் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. இராசேந்திரசோழனின் 4-ஆவது ஆட்சியாண்டில் (கி. பி. 1056) வெளியான ஒரு சாசனத்தில் பின்வரும் புனைந்துரையினைக் காணலாம்.

''எஞ்சின அரைசரொடு அஞ்சிய சளுக்கி

குல(குல) குலைந்து தலைமயிர் விரித்து
வென்னுற நெளித்து பின்னுற நோக்கி
கால் பறிந்தோடி மேல் கடல் பாயத்
துரத்திய பொழுது..........." 1

எனவே வடமொழிப் பிரசஸ்தி என்பதும் தமிழ் மெய்க்கீர்த்தி என்பதும் பெரிதும் ஒற்றுமையுடையனவே. பிரசஸ்தி என்பதின் தமிழாக்கமே மெய்க்கீர்த்தி எனலாம். இம் மெய்க்கீர்த்தி மெய்யான புகழைக் கூறுவதாம். ஒரு மன்னனது ஆட்சியில் நடந்த நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் புகழ்ந்து கூறும் ஒரு கருவியே மெய்க்கீர்த்தி.

இம்மெய்கீர்த்தி பாடும் முறையினை 10-ஆவது நூற்ருண்டு முதலாகவே காண்கிருேம் என்றும், இம்முறை முதல்இராசராசனகாலத்திருந்துதான் வழக்கினுள் வந்தது என்றும் கல்வெட்டு வல்லுநர்களும், இலக்கிய ஆராய்ச்சியாளர்களும் கூறுகின்றனர். ஆனல் இவ்வாருன பிரசஸ்தியினை இரண்டாம் நந்திவர்மபல்லவனின் 21-ஆவது ஆட்சியாண்டில் (கி. பி, 738) வெளியிடப்பட்ட உதயேந்திரச் செப்பேடுகளில் 2 காணலாம். இதனைப் பாடியவன் கவி பரமேசுவரன் என்ற குறிப்பும் அதில்உள்ளது. 'செந்தமிழ்' தொகுதி 60, பக்கம் 119-ல் வெளியான 'வேள்விக்குடிச் செப்பேடுகள்' கி பி. 575 முதல் கி. பி, 770 வரை அரசு புரிந்த பாண்டிய மன்னர்களது மெய்க்கீர்த்திகளின் தொகுப்பே ஆகும். இவற்றில் ஆளும் அரசனது முன்னேர்களின் வெற்றிச் செய்திகள், கொடைச் செய்திகள் முறை

1. S. I. I. Vol. III Part I P. 59
2. S. I. I. Vol. II Part III P. 361

யாகக் கூறப்பட்டுள்ளன. எனவே மெய்க்கீர்த்தி கி. பி. 8–ஆம் நூற்ருண்டு முதலாகவே வழங்கப்பட்டுவந்துள்ளது என்பது தெளிவு.

இனி, மெய்க்கீர்த்தியின் இலக்கணம் முதலான வற்றை நோக்குவோம். குணவீர பண்டிதர் பின்வரும் நூற் பாவைக்கூறி மெய்க்கீர்த்தியின் அமைப்பினைக் காட்டு கின்ருர்.

"தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீரடியால்
எழிலரசர் செய்தி இசைப்பர்"

ஆகவே, மெய்க்கீர்த்தி கூறுங்கால் அதன் அடிகள் சொற் சீரடி பயின்றுவரவேண்டும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி. சொற்சீரடியாமாறு தொல்காப்பியத்தில் காணலாம்.

"கட்டுரைவகையான் எண்ணொடு புணர்ந்தும்
முற்றடி இன்றிக் குறைவு சீர்த்தாகியும்
ஒழியசை ஆகியும் வழியசை புணர்ந்தும்
சொல் சீர்த்து இறுதல் சொற்சீர்க்கு இயல்பே"

(தொல்–119)

இதற்கு உரை வகுத்த இளம்பூரணர், பாட்டின்றித்தொடுக் கப்படுவதும், ஈரடித் தொடையாகியும், ஓரடித்தொடையா கியும் வருவதும், நாற்சீரடியேயன்றி மூன்று சீரடியானும் இரண்டு சீர்அடியானும் வருவதும், ஒழிந்த அசையினை உடைத்தாகி வருவதும், ஒரு சீரின்கண் பிறிதொரு சீர்வரத் தொடாது ஓரசைவரத் தொடக்கப் பெறுவதும், சொற் ருனே சீராந்தன்மையைப் பெற்று வருவதும் ஆகிய இப்

பெற்றியினை உடையது சொற்சீர் எனக் கூறுகிறார்.

பன்னிரு பாட்டியலில் வச்சநந்திமுனிவர் வகுக்கும் மெய்க்கீர்த்தி இலக்கணத்தைக் காண்போம்.

"சீர் நான்காகி இரண்டடித் தொடையாய்
வேந்தன மெய்ப்புகழ் எல்லாஞ் சொல்லியும்
அந்தத்து அவன் வரலாறு சொல்லியும்
'அவளுடன் வாழ்க' எனச் சொல்லியும், மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறம்பட உரைப்பது சீர்மெய்க்கீர்த்தி"

இதில் அடியின் அமைப்பு அளவடியாகவும், இரண்டடிகளில் தொடைபுணர்ந்தும் வருதல் வேண்டும் என்ற வரையறையினைக் காண்கிறோம். ஆனல் பெரும்பாலான மெய்க்கீர்த்திப் பாக்கள் இவ்விலக்கணத்துக்குப் புறம்பாகவே பயின்று வந்துள்ளன. பொருளும் இம்முறையில் அமையப் பாடவில்லை. எனவே, இவ்வாறான வரைவுகள் மெய்க்கீர்த்திக்குப் பொருந்தி வரா என்க.

முன்னர்க்கூறிய நூற்பா இவ்வாறு வரையறை செய்து இலக்கணங்கூறாது, அரசனது அனைத்துச் செயல்களும், அளவடியும் அடித்தொடையுமென அமையாது, சொற்சீர் அடியானே பாடப்பெறும் என்ற பொது நிலையில் இலக்கணங்கூறிச் செல்கிறது. மேலும், இவ்விலக்கண முறையே மெய்க்கீர்த்திச் செய்யுட்களில் பயின்று வந்துள்ளன என்பதையும் கருதுதல் வேண்டும்.

சுருங்கக்கூறின், மெய்க்கீர்த்தி, பிரசஸ்தியின் மொழி பெயர்ப்பே; இதில் புனைந்துரைகள் கலந்திருக்கலாம்; கி.பி.

8-ஆவது நூற்றுண்டிலேயே இதுபயின்றுள்ளது; அவ்வாறு பயிலுமிடத்து சொற்சீரடியாலேயே பாடினர், என்ற செய்திகளை நன்கு அறியலாம்.

இவ்வாருன இலக்கணங்கள் அமையக் காணப்படும் 8-ஆவது நூற்றுண்டுச் செப்பேட்டுப் பகுதி ஒன்றினைக் காணபோம். இதில் காணும் மெய்க்கீர்த்தி நெடுஞ்சடைய பாண்டியனைப் பற்றியது.* அவன் செய்த போர்கள், கோயிற் பணிகள், கொடைகள் முதலாயினவற்றைக் கூறுகிறது. இவை முறையே அமைந்துவாராது, காலத்துக்கு ஏற்பச் செய்த செயல்களை ஒட்டி மாறி மாறி வரும் தன்மையினைக் காணலாம். அதாவது, ஆண்டுதோறும் நிகழும் நிகழ்ச்சிகளை— நாட் குறிப்பினைப்போல - காலவாரியாக மெய்க்கீர்த்தியில் குறித்து வழங்கினர். அதனுல் ஒரு மன்னனது அரசியல் வரலாற்றில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடந்தன: நிகழ்ச்சியின் காலம், எந்த நிகழ்ச்சி முன் நடந்தது எது பின் நடந்தது என்ற முறைகள் முதலானவற்றைத் தெளிவாக அறிந்து கொள்ள அதுபெரும் பயனுடையதாக இருக்கின்றது. நிகழ்ச்சிகளும், செயல்களும்மிகுதியாக மிகுதியாக பெய்க்கீர்த்தியின் அளவும் அதற்கேற்ப விரிவடைந்து கொண்டே போகும். எனவே இவ்வாருன வரலாற்று அறிவுக்கு இன்றியமையாத ஒரு பெருங்கருவியாக இம்மெய்க்கீர்த்தி கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் இடம் கொண்டு விளங்குகிறது

இம் மெய்க்கீர்த்தியின் சுருக்கம் வருமாறு: இவன்

---

* இவன் 768ல் பட்டம் எய்தினுன். அவனது 17ஆம் ஆட்சியாண்டில் இச்செப்பேடு வெளியிடப்பட்டது. எனவே, கி. பி. 785.

வெள்ளூர், விண்ணம், செழியக்குடி, காவிரியின் வடகரையில் அமைந்திருக்கும் ஆயிரம்வேலி, அயிரூர் ஆகிய இடங்களில் போர்செய்து பகைவர்களை வென்றான். அதியனைப் புகழியூர்ப் போரில் வென்று அவனது தேர்களையும், குதிரைகளையும் கவர்ந்தான். பல்லவனும் கேரளனும் ஒன்று சேர்ந்து எதிர்க்கத்தன்கடல்போன்ற படையால் துன்புற்று ஓடும்படி செய்தான். குடகொங்கு மன்னனை மதுரைமாநகரில்சிறைவைத்தான். கங்கபூமிவரையிலும் தன்பெயரைப் பறைசாற்றினான். கொங்குநாட்டையும், இலங்கையையும் கைக்கொண்டான். விழிஞம் அழிவுபட மிகுந்தசெல்வத்தையும், யானை, குதிரை முதலியவற்றையும், அரசச்சொத்துக்களையும் கவர்ந்தான். இவ்வாறு பகைவர்களை வென்று பெருஞ்சிறப்பு அடைந்தான்.

காஞ்சிவாய்ப் பேரூரில் திருமாலுக்கு ஒரு பெரிய கோயிலைக் கட்டினான். கரவந்தபுரத்துக்கு அழகிய பெரிய மதில் சமைத்தான். மனுதர்ம சாத்திரம் வழுவாது அரசு புரிந்தான். மதுரை நகரில் இருந்துகொண்டு செல்வச்சிறப்புடன் உலகத்தைக் காத்து இனிதாக ஆட்சி நடத்தினான்' இச்செய்திகளைக்கொண்டிலங்கும் மெய்க்கீர்த்திப் பகுதியினை அனைவரும் படித்துப் பயன்பெறுக.

* "அன்னன் ஆகிய அலர்கதிர் நெடுவேல்
தென்னன் வானவன் செம்பியன வடவரை
இருங்கயல் ஆணை ஒருங்கு உடன் நடா
ஒலி கெழு முந்நீர் உலகு முழுது அளிக்கும்

*_ Indian Antiquity, Vol. XXII P. 70.

வலி கெழு தினிதோன் மன்னவர் பெருமான்
தென்னவர் ஆழ தெம்புனற் குறட்டிப்
பொன்மலர் புறவில் வெள்ளூர், விண்ணம்
செழியக்குடி என்றிவற்றுள் தெவ்வர்
அழியக் கொடுஞ்சிலை அன்றுகால் வளைத்தும்
மா இரும் பெரும்புனற் காவிரி வடகரை
ஆ இரம் வேலி அயிரூர் தன்னிலும்
புகழ்யூரும் திகழ்வேல் அதியனை
ஓடு புறங் கண்டவன் ஒலியுடை மணித்தோர்
ஆடல்வெம் மா அவையுடன் கவர்ந்தும்
பல்லவனும் கேரளனும் ஆங்கவர்க்குப் பாங்காகிப்
பல்படையோடு பார் நெளியப் பல்வமெனப்
பரந்தெழுந்து
குடபாலுங் குணபாலுங் அணுக வந்து விட்டிருப்ப
வேல்படை ஓடு மேற் சென்றுங்கு
இருவரையும் இருபாலும் இடர் எய்தப் படை
விடுத்துக்
குடகொங்கத் தடன் மன்னனைக் கொல்களிற்றொடுங்
கொண்டு போந்து
கொடி அணிமணி நெடுமாடக் கூடன் மதிலகத்து
வைத்துக்
கங்கபூமி அதனளவுங் கடிமுரைசு தன்பியர் அரையக்
கொங்கபூமி அடிப்படுத்துக் கொடுஞ்சிலை பூட்டிமி
வித்துப்
பூஞ்சோலை அணிபுறவிற் காஞ்சிவாயப் பேரூர் புக்குத்
திருமாலுக் கமர்ந்துறையக் குன்றமன்னதோர்
கோ இலாக்கியும்
ஆழி முந்நீர் அகலாக அகல்வானத்து அகடுரிஞ்சும்

பாழி நீண்மதில் பரந்தோங்கிப் பகலவனும் அகல
வோடும்
அணியிலங்கையில் அரணிதாகி மணியிலங்கு(ங்)
நெடுமாட
மதில் விழிஞம் அது வழியக்
கொற்றவேலை உறை நீக்கி வெற்றத்தானை வேன்
மன்னனை
வென்றழித்தவன் விழுநிதியோடு குன்றமன்ன குலை
களிறுங்
கூந்தன் மாவுங் குலதனமும் நன்னாடும் அவை
கொண்டும்
அரவிந்த முகத்திளையவர் அரிநெடுங்கண் அம்புகளால்
போர் மைந்தர் புலம்பெய்தும் பொன்மாட நெடுவீதிக்
கரவந்தபுரம் பொலிவெய்தக் கண்ணகன்ற தோர்
கல்லகலோடு
விசும்பு தோய்ந்து முகிறுஞ்சலில் அசும்பரு தவகன்
சென்னி(ங்)
நெடுமதிலை வடிவமைத்தும்
ஏவமாதி விக்ரமங்கள் எத்துணையோ பலசெய்து
மணிமாடக் கூடல் புக்கு மலர்மகளோடு வீற்றிருந்து
மனுதர்ச்சித மார்க்கத்தினால் குருசரிதம் கொண்டாடிக்
கண்டக சோதனை தான்செய்து கடன் ஞாலம்
முழுதளிக்கும்
பாண்டிய நாதன் பண்டித வத்சலன்
வீரபுரோகன் விக்ரமபாரகன்
பரம வைஷ்ணவன் றானாகி(ங்)
நின்றிலங்கும் மணி நீண் முடி
நில மன்னவர் நெடுஞ்சடையற்கு–''

# உள்ளுறையும் இறைச்சியும்

பேராசிரியர், ஆ. சிவலிங்கனர்,

மயிலம்.

(சென்ற இதழ் 111-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ் வரிகள் பரத்தயிற் பிரிந்து வந்த தலைவனைத் தலைவி விளித்த விளியாக அமைந்தன. இவ்வரிகளில் வெளிப்படையாகச் சொல்லப்பட்ட பொருளாவது:

" வயல் எங்கும் நீர் மலிந்திருந்தது. அந் நீரில் கருங் குவளைகள் மலர்ந்திருந்தன. அவற்றைப் பறித்தவர்கள் தலையில் சுமந்து வந்து விற்பதற்காக ஊர் புகுந்தனர். அம் மலர்களில் பொய்கையிலிருந்த வண்டு மொய்த்துவந்தது. ஊரில் யானையின் மதத்திலும் வண்டு மொய்த்திருந்தது. மலரில் வந்த பொய்கை வண்டுக்கு யானை மதத்தில் மொய்த்த வண்டானது அம் மதத்தை உண்ணும்படி விருந்து செய்தது. பகற்பொழுதெல்லாம் மதத்தை உண்ட வண்டு, இரவில் காதலருடன் களிக்கும் மகளிருடைய கூந்தவில் இருந்த முல்லை மலரில் பாய்ந்து பிற மலர்களை நுகர வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் முன் தான் இருந்த பொய்கையையும் மறந்திருந்தது. அத்தகைய புனல் மலிந்த ஊரானே!"

வெளிப்படையாக இப்பொருள் சொல்லப்பட்டாலும் சொல்ல வந்த பொருள் இது இல்லை. இதன் உள்ளே மறைந்து கிடப்பதே சொல்ல வந்த பொருளாம். அப் பொருளை நாமே உய்த்துணர வேண்டும். அதாவது, 'தலைவன் தன்னை சேரிப்பரத்தையர் இற்பரத்தையர்களைக் கூடி மகிழ்ந்து, தன்னை மறந்திருந்தான்'

என்று கூற நினைத்ததே அப்பொருளாம். அதனால்அப்பொருளை உள்ளுறை பொருள் என்பர். அப்பொருளையுணருமாறு வந்த வெளிப்படையான பொருளை உவமப் பொருள் என்பர். அதற் கேற்ப நச்சினார்க்கினியர் உவமப் பொருளையும் உள்ளுறைப் பொருளையும் இயைத்துக் காட்டுவதை நோக்குவோம்.

" வீங்குநீர் பரத்தையர் சேரியாகவும், அதன்கண் அவிழ்ந்த நீலப்பூக் காமச் செவ்வி நிகழும் பரத்தையாகவும், பகர்பவர் பரத்தையரைத் தேரேற்றிக் கொண்டுவரும் பாணண் முதலிய வாயில்களாகவும், அம்மலரைச் சூழ்ந்த வண்டு தலைவனாகவும், யானையின் கடாத்தை ஆண்டுறைந்த வண்டுகள் வந்த வண்டுக்கு விருந்தாற்றுதல் பகற்பொழுது புணர்கின்ற சேரிப்பரத்தையர் தமது நலத்தை அத்தலைவனை நுகர்வித்தலாகவும், கங்குலின் வண்டு முல்லையை யூதுதல் இற்பரத்தையருடன் இரவு துயிலுறு தலாகவும், பண்டு மருவிய பொய்கையை மறத்தல் தலைவியை மறத்தலாகவும், பொருள் தந்து ஆண்டுப் புலப்படக் கூறிய கருப் பொருள்கள் புலப்படக் கூறாத மருதத்திணைப் பொருட்கு உவம மாய்க் கேட்டோனுள்ளத்தே விளக்கிநின்ற வாறு காண்க."
இது உள்ளுறை எனப்படும்.

உவமப் பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும் வெளிப்படையாகவே கூறப்படுவது ஏனை உவமம். 'பவளம் போலும் வாய்' என்பது அது.

சுட்டு: சுட்டாவது ஒன்று நினைத்து ஒன்று சொல்வது- அது, சொல்லவேண்டிய கருத்தை நேரிடையாகச் சொல்லாமல் வேரெ ருபொருளைச் சுட்டிச் சொல்வதாம் அது இரண்டு வகை

1. தலைவியைக் கூடிய தலைவன் நாளும் இரவில் வந்து கூடிச் செல்வதாக இருந்தான். அவனைத்தடுத்து வரைந்து கொள் ளும்படித் தூண்ட எண்ணினள் தோழி. ஒரு நாள் அவன் வந்து

மறைவில் இருக்கும் போது அவனை அறியாதவள் போலத் தோழி யானவள் மழையை விளித்துப்பின் வருமாறு கூறினாள்.

'கருங் கடல் நீரை முகந்த மேகமே! நீ போர்முரசு போல முழங்கி வீரர் வாள் போல மின்னி இப்படியே (மழையை பெய்யாமல்) ஆர வாரம் மட்டுமே செய்து போவாயா! அல்லது எம் தலைவி காவல் புரியும் இந்த தினைப்புனத்திடத்தில் மழையையும் பொழிவாயோ!''

இப்படி மழையைப் பார்த்துச் சொன்னாலும் தோழிக்கு மழையைப் பற்றி எண்ணமில்லை. நேராகதலைவனிடம் சொல்வதற்குப் பதிலாக மழையைச் சுட்டிச் சொன்னாள். அவள் எண்ணம் எல்லாம்,

''ஏ! தலைவனே! நீ பல்கால் இப்படியே வந்து வந்து ஊரார்க்கெல்லாம் தெரியும் படியான அவரை விளைவிப்பாயோ? அல்லாது இவ்வேனல் காக்கும் இவளை இன்புறுத்த வேண்டி மணந்து கொள்வாயோ?'' என்று கேட்கத்தான் அமைந்திருந்தது. ஆனால் நேரில் கேட்கமனமில்லாமல் மழையைசுட்டிக் கேட்டாள். இவ்வாறு அமைவதே சுட்டு எனப்படும். இச் சுட்டு அமைந்த பாடல் – நச்சினார்க் கினியர் காட்டியது வருமாறு:

பெருங்கடல் முகந்த பல்கிளைக் கொண்மூ
இருண்டுயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்
போர்புரு முரசின் இரங்கி முறைபுரிந்து
அறநெறி பிழையாத் திறனறி மன்னர்
அருஞ்சமத் ததிர்ந்த பெருஞ்சே யாடவர்
கழித்தெறி வாளின் அழிப்பன விளங்கும்
மின்னுடைக் கருவியை யாகி நாளும்
கொன்னே செய்தியோ அரவம் பொன்னென
மலர்ந்த வேங்கை மலிதொட ரடைச்சிப்

பொலிந்த ஆயமொடு கண்தக வியலித்
தழலே வாங்கியும் தட்டை யோப்பியும்
அழல்ஏர் செயலே யந்தளிர் ததையும்
குறமகள் காக்கும் ஏனற்
புறமும் தருதியோ வாழிய மழையே

(அகம்: 188)

இங்கே தோழி நினைத்த ஒன்று,'தலைவனே! நீ, அவர் விளைக்கப் போகிருயா இவளை மணந்து கொள்ளப் போகிருயா' என்று கேட்டு வரைவு கடாவ வேண்டும் என்பது. சொன்ன ஒன்று மழையை நோக்கிச் சொன்னது. இப்படிச் சொல்வது ஒரு வகையான சுட்டு உள்ளுறையாம்

2. தலைவன் பிரிந்தாளுக ஆற்ருது வருந்திய தலைவியைத் தோழி ஆற்றுவிக்க எண்ணினுள். 'தலைவியே! நம்மிடதுத் தலைவன் மிக்க அன்புடையவன்; விரைந்து வந்து விடுவான். நீ ஆற்றியிரு' என்று சொல்ல நினைத்தாள். நினைத்தவள் 'நீ ஆற்றியிரு' என்று சொல்லாமல் தலைவன் அன்புடையவன் என்பதையே சொன்னுள்.

தலைவியே! நம்மிடத்து அன்புமிகவுடையர்: அதன் மேலும் களிருனது தன் பிடியின் பசியைக் களைவதற்கு ஆச்சாமரத்தின் கொம்புகளைப் பிளந்து நார் உரித்து ஊட்டும் அன்புடைய காட்சியையும் உடையது அவர் சென்ற வழி அதனைக் காண்பார் அவர்; அதனுல் அன்பு மேலும் பெருகி வரவும்வருவர்.'' என்ருள்

இவள் சொல்லில் நீ ஆற்றியிரு என்பதில்லையாயினும் அப் பொருள்படவே இருத்தலின் இதுவும் சுட்டு என்ற உள்ளுறையாயிற்று. இதில் கருப்பொருளாகிய யானையின் அன்பு

கட்டப்பட்டது. ''அவ்வன்பு காண நேருமாதலின் தலைவனும் அன்புடையனாய் வருவான் நீ ஆற்றியிரு'' என்பது அக்கருப் பொருளைச் சுட்டி வந்த உள்ளுறையாம். இப்படி வரும் சுட்டு அன்புறுதகுந இறைச்சியுட் சுட்டி வரும் சுட்டாம் (இதுபற்றிப் பின் ஆராயப்படும்)

நகை

நகை யென்பது நகையாடி ஒன்று நினைத்து ஒன்று கூறுவது:

''விளையாட் டாயமொடு......பிறவுமா ருளவே'' (நற்.172) என்ற பாடலில், புன்னையை அன்னை நுவ்வையாகும் என்றுசொன்னாள் ஆதலின் இவள் எதிரே நும்மோடு நகையாடுவதற்கு அஞ்சினேம்; இங்கே பிறமரநீழலும் உண்டு அங்கே நகையாடலாம்'' என்று தோழி தலைவனிடம் கூறியது நகைச்சுவைக்குரியதேயாம். இந்நகைச்சுவை மூலம் தோழியானவள் தலைவனிடம் இனிப் பகற்குறிவாராதே என மறுத்துரைத்தாள். தோழியின் நினைப்புத் தலைவனைப் பகற்குறி வாரற்க; விரைந்து வரைந்துகொள்க என வரைவு கடாவுவதாம். ஆனால் சொன்னது மேற்கண்டபடி நகையாடிய சொல்லாம். இப்படிநகையாடிச் சொல்வதால் ஒரு பொருள் உள்ளே உறையும்படிச் சொல்வதே நகை உள்ளுறையாம்.

(தொடரும்)

# அகமும் புறமும்

—✻○✻—

தி. வேலவன் எம். ஏ.

திசைகாக்கும் கரிகளும், தென் இழங்கை மாக்களும், கானுறை விலங்குகளும் அன்றி மண்ணுலக மக்களும் விண்ணுலகத் தேவரும் மங்கல ஓரையில் இராமனுக்குப் பொன்திணி மகுடஞ் சூட்டிப் பூவுலகாள அளிக்கும் காட்சியைக் காண அயோத்தி நகருக்கு வந்திருந்தனர். கதிர் எழுந்தது கனக பேரிகைகள் முழுங்கின, காளையரும் கன்னியரும் ஆன்றோரும். சான்றோரும் முனிவரும் தவசியரும், முடிபுனையும் மண்டபஞ் சென்றடைந்தனர்.

கங்கை முதல் குமரிவரை உள்ள ஆறுகளின் நறும் புனலும், நாற்றிசைக் கடல்களின் அலைநீரும், மங்கல கலையங்களில் நிரப்பிவைத்து, ஓமத்தீ வளர்த்ததற்கு உரியன் எல்லாம் அமைத்து, வீரச்சிங்காவாதனமும் அமைத்து வேறு வேண்டுவன வெல்லாம் வேதபாரகர் வசிட்டனின் மேற்பார்வையில் அம்மண்டபத்தில் செய்து முடித்தனர். கணிதநூல் வல்ல காலக் கணக்கர் முடிபுனைகாலம் வந்தடுத்தது என்றனர். வசிட்டனும் இராமனைக் கொணர்க என்றான்.

அன்புருக என்புருகக் கருணை காட்டும் இனிய தந்தையைக் காண அவன் மனையுட் சென்றான். இன்முகங்காட்டி அருமொழி கூறும் பெருமகன் அங்கிருக்கக் காணாது, கைகேயின் மனையகம் புகுந்தான். இராமன் வரவுகண்ட

கைகேயியும் கூற்றுபோல் அவன்முன் சென்றாள். இராமன், தலை தரையில்பட வணங்கி வலக்கையால் வாய் புதைத்து இடக்கையால் நீண்ட ஆடையை மடக்கித் துவண்டு நின்றான்.

மங்கல ஒலிகள் அவன் செவியில் விழுந்தன: தாயை நோக்கினான்: அவள் ஈரம் அற்றவளாக நின்றாள்: தந்தையைத் தேடினான்: அவன் மண்மீது வீழ்ந்து கிடந்தான். துயரத்தில் ஆழ்ந்து கிடந்தான்; இராமன் துருவிநோக்கினான்.

ஒரு நாளில் ஏற்பட்ட மாற்றங்களை நினைந்தான். முதுமை வந்ததென்று காதருகே முளைத்த மயிர் வெண்ணிறம் காட்டி அறிவுறுத்த, முறைமை எண்ணி, அமைச்சர் குழுவையும் அந்தனர் குருவையும் கூட்டித் தன் முனைவைக் கூறினான்.

இயைந்துவரும் பண்பாடும் அமைந்துவரும் அரசியல் மரபும் எண்ணித் தன் உளப்பாட்டை வெளிப்படுத்தான். அறநெறி நிறுதலும்: அறன்வழிப்படும் பொருள் ஈட்டலும்: முறைப்படு இன்பம் துய்த்தலும், வீட்டுநெறி உய்தலும் ஆடவர்க்கு இயைந்த உளபாடு, குல ஒழுக்கம், கொள்கை போற்றல், தன்முனைப்பு அவர் உளப்பாட்டில் உறைந்துவிடும் திறப்பாடுகள்,

பண்பாட்டினையும் உளப்பாட்டினையும் செவ்வனே சீர்தூக்காவிடில், அன்றைய வாழ்வு நெறியில் தசரதனும் அவன் குலமும் வாழ்ந்த திறனையும், அவன் மனையகம் சிக்கலுள் புகுந்த வகையும் தெளிவாக உணருதல் அரிது

ஆகும். உளப்பாடும் பண்பாடும் தமக்குள் கொண்ட இகலே நிகழ்ந்த பூசலுக்கு அடிப்படை. ஆனால், இகல் தானாக ஏற்பட்டதன்று; அமைந்த சூழலின் குறைபாடு தூண்டியதால் மூண்டது.

பண்பாடு இருபாலாருக்கும் பொது. ஆயின் உளப்பாடு பொதுவன்று: ஆடவரைப் போலன்றி மகளிரின் உளப்பாடு, இனமுனைப்பு உடையது பெற்றசேய். வந்த குலம், வாழும் சுற்றம் உற்ற கணவன் இவர் நலனைப் பேண முற்படுவது: புறவாழ்வு ஆடவரால் அமைய அகவாழ்வு மகளிரால் நலம்பெறும்.

பெண்டிர் ஆற்றும் கடனெல்லாம் புறவாழ்வில் திரிபுடன் தோன்றும். ஓங்கி வளர்ந்த மரத்தின வேர்ப் பகுதிகள் போன்றன அகவாழ்வின் கூறுகள்; எஞ்சியன புறவாழ்வின் கிளைகள். அகத்தின் ஊட்டம் புறத்தில் தோன்றும்; புறத்தின் ஆக்கம் அகத்தை வளர்க்கும். ஆயினும், வெளிஉலகு உணர்வது புறத்தையே ஆகும்.

தன்னுணர்வு வந்தது: மரபு காக்க விழைந்தான் அமைச்சரை நோக்கிய தசரதன் தன் விழைவைச் சாற்றினன். ஆறு ஆயிரம் ஆண்டுகள் நாணிலத்து மன்னுயிரெல்லாம் தீதரக்காத்தது போலத் தன்னுயிரையும் தீதறக் காக்கும் நெறியை நினைந்ததைக் கூறினன். தசரதனுக்கு அரசியல் பொறையை ஆற்றும் ஆற்றல் குன்றியது: எதிர்ந்த பகைஞரை வென்ற அவன், காமம் வெகுளி மயக்கம் என்னும் நாமம் கெடுக்கும் பகைஞரை வெல்ல நினைந்தான். ஐம்புலன் வழிப்பட்ட மனப்பேயின வெற்றியை முற்றும் அழிக்க விரும்பினன். பிறப்பெனும் பெருங்கடலை

துறவு எனும் தெப்பம்கொண்டு நீந்தக்கருதின், எனவே''

இராமன் என்னேவை நீக்குவான்
வந்தனன் இனியவன் வருந்த யான் பிழைத்து
உய்ந்தனன் போவதோர் உறுதி எண்ணினேன்''

(II: 29) *

எனத்தயரதன் உரைத்தான்– அமைச்சவை வியந்து கேட்டது. இராமனுக்கு அவன் சூட்ட விழைந்ததை இரு மனதோடு ஏற்றது, கருத்தை வினவிய மன்னவனுக்கு யாதுமே கூற இயலாத அவை,

''நின் மணிப் புதல்வனை முறையால்
அரசனுக்கிப்பின் அப்புறத்து அடுத்தது புரிவாய்''

( II: 49 )

என மொழிந்தது.

''பஞ்சிமென் தளிரடிப் பாவைகோல் கொள
வெஞ்சினத்து அவுணர் தேர் பத்தும் வென்றுளேன்''

( II: 21)

என்று தயரதன் கூறியதைக் கேட்ட அமைச்சரோ, வசிட்டனே அன்று தயரதன் கைகேயிக்குக்கொடுத்த மொழியைக்குறித்து யாதுமே மொழிந்திலர். ஆயின் தயரதன் அதை எண்ணினன் கருத்துட்கொண்டான். ஆதலாலே,

---

* முதல் எண் காண்டத்தையும் இரண்டாவது எண்பாடலையும் குறிக்கும். கம்பராமாயணம்: அயோத்தியாகாண்டம்: (17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–5, 1958)

இராமனுக்கு அரசை நல்கி...... மாதவந் தொடங்கிய
வனத்தை நண்ணுவேற்கு, யாதுநுங் கருத்து''''
( II: 33 )

என அவையைக் கேட்டான்,

உறுவதும் வருவதும் உணரவல்ல அவை ஒன்றும் மாற்றம் சாற்றாது தயரதன் விழைவுக்கு ஒப்புதல் கூறியது. அவனும் இராமனை அவைக்கே கையடை கொடுத்தான்.

மைந்தனைத் தனது சேயென்று கொண்டாடி விரைந்து செயல்படாது அவனைத் தன்னிலும் அரியனாகக் கருதிய தசரதன்

''நின்னை வேண்டி எய்திட விரைவது ஒன்று உண்டு''
II: 63 )

என நயந்து கூறினான். சொன்மறா மக்கள் பெற்றவர் சிறந்தார்; முன்னொருவன் கங்கை தந்து தன் தந்தைக்கு வீடளித்தான்.

''தருமம் அன்ன நிற்றந்தயான் தளர்வது தகவோ''
(II: 65 )

எனப் பன்ளிப்பன்னி உரைத்தான் வேந்தன். தயக்கம் அவனை ஆட்கொண்டிருந்தது போலும். மீண்டும்,

''அருந்துயர்ப் பெரும்பரம் அரசன்
வினைவயின் என்வயின் வைத்தனன் எனக்கொள்ளல்
வேண்டா

புனையும் மாமுடி புனைந்து இந்த நானிலம் புரக்க
நினையல் வேண்டும் நான் நின் வயிற் பெறுவதீது''
( II: 71 )

என்றான்.

தயரதன் மைந்தனைத் தன்னிலுஞ் சிறந்தவனாகக் கருதினான். பார்வோன் ஆற்றின் கரையில் யோவான் என்பவன் தன்னை வேண்டி வந்தவருக்கு, ஞானமுழுக்கு ஆட்டி அறிவுரை கூட்டினான். அவனுக்கு மாணவரும் வழிபாட்டாளர்களும் பெருகினர். எல்லா நாட்களையும்போல ஒருநாள் காலை ஞானமுழுக்குப்பெற இளைஞன் ஒருவன் யோவான் எதிரே வந்துகொண்டிருந்தான்; அவன் வரவைக்கண்டு யோவான் வியந்தான். இளைஞனே "என்னை நீ ஞானமுழுக்கு ஆட்டு" எனக் கேட்டான். அவனினும் வயதும் பயிற்சியும் அதிகம் உடைய யோவான் தனது சீடர்கள் வியக்க, "நீர் என் ஆசான்; நான் உம் அடிமை" என அவ்விளைஞன் கால்களில் விழுந்தான். "நான் தேடிய எனது குரு, ஆண்டவனின் மைந்தன் ஏசு நீயிரே; உமக்கு யான் ஞானமுழுக்கு ஆட்டுவதோ?" என நின்றான். அந்த நிலையிலேயே தசரதனும் இராமன்பால் பரிவுகாட்டி நின்றான்.

இராமனும் மன்னவன் பணி எனத் தந்தை சொல் கொள்ள இயைந்தான் விருப்பமுற்று அன்று. நீதியின் முறைகருதி,

"பாதுகொற்றவன் ஏவியது அது செயலன்றோ
நீதியெற்கென நினைந்தும் அப்பணிதலை நின்றான்.
(II: 72)

மகிழ்ந்த தயரதன் கணிதமாக்களை அழைத்து முடிபுனை மங்கல நாள் கேட்டான். வருநாளே ஏற்ற திருநாள் என்றனர் அவர். பிறமன்னர்க்கு ஓலையும், நகர் மக்களுக்கு வள்ளுவர்வழிச் சேதியும் விடுக்க யாவரும் உவந்து நகரை அணிசெய்தனர். வசிட்டன் இராமனுக்கு அருமொழிகள் கூறினன்.

"வையம் மன்னுயிராக அம்மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னன்" (II: 19)

"யாரொடும் மனக் கோளிலது என்றபின்
போரொடுங்கும் புகழொடுங்காது தன்
தாரொடுங்கல் செயலாது" (II: 15)

என எடுத்துரைத்தான்.

வருநாளில் இராமன் முடி அணிதலைக் காண விழைந்து அயோத்தி நகரை மக்கள் அணி செய்து துயில டங்கினர். நள்ளிரவு. உயிரனைய ஒருமகனுக்குத் திருமுடி சூட்டப்போவதை எண்ணி மகிழ்ந்த தயரதன், தன் மனதுக்கு இனிய கைகேயியின் கோயில் நண்ணினான். கைகேயியோ

"நவ்வி வீழ்ந்தென நாடக மயில் துயின்றது என்ன" (II: 187)

அணி மலரும் சாந்தும் மண்ணில் சிந்தி, வளைகள் சிதறி, கூந்தல் பரக்க ஆடையும் அணியும் சிதறத் தரையில் சாய்ந்து கிடந்தனள். அவள் நிலைகண்டு பொறாத மன்னவன் அவள் மொழி கேட்டு மருண்டான்.

"சான்றிமையோர் குலமாக முன்நீ தருதற்கு
ஏன்ற வரங்கள் இரண்டும் ஈதி என்றாள்" (II:195)

வாழும் ஆண்டுகளில் கேளாத அவ்வரத்தைத் தரையில் வீழ்ந்து ஏன் இன்று கேட்கின்றாள் என்று அவன் தயங்கினான். அவள் நிலைபிறழ்ந்தனளோ என்றையுற்றான்.

முன்பு, கைகேயியின் உள்ப்பாடு பண்பாட்டோடு

இயைந்து நின்றது. இரண்டும் சமன்பட நின்றன. உளப்பாட்டின் உறுதி இன்மைகளெல்லாம் அகன்றிருந்தன, அவை அவளை உயர்த்தி இருந்தன. ஆனால் அன்றுஒதுக்கிய, வென்று அடக்கிய உணர்வுகளெல்லாம் மூண்டு எழுந்தன; முற்றுகைஇட்டன; அவளை வென்றன. அவள் உளப்பாட்டினை இழுத்தன; சமன்பாட்டை முறித்தன.

அடங்கிய சேயுணர்வு, பிறந்த குடிப்பற்று, அமைந்த சுற்றத்தின் எண்ணம், உற்ற கணவன்பால்பட்ட பரிவு இவையெல்லாம் தூண்டிவிடப்பட்டன; அவளோ ஆட்பட்டாள், அடங்கிய உணர்வெல்லாம் திரண்டெழுந்து அவளை ஆண்டன.

பிற்பகல்வேளை. பேதை துயின்றுகொண்டிருந்தாள். பொற்பமை மேனி கண்ட கூனி,

"செம்பொற் சிறடிகைகளிற் தீண்டினாள்" (II: 142)

துயிலின் மயக்கம் மறையும் முன்பே, இடுக்கண் மூட்டத் துடிக்கும் கூனி கதிக்கும் சொல்லை வீசினாள். அரவின் வடி வெடுத்து சாத்தன் ஏவாள் முன் அறிவுதிரிக்கச் சென்றது போல் அவளும் கைகேயியைத் தீண்டிநின்றாள்.

"அணங்குவாள் விடவராவணுகு மெல்லையும்
குணங்கெடா தொளிவிரி துளிர்வெண்டிங்கள் போல்
பிணங்குவான் பேரிடர் பிணக்க நண்ணவும்
உணங்குவாயல்லை நீ உறங்குவாய் என்றாள். (II: 144)

பரதனை ஒருமகனாய்ப் பெற்றெடுத்த தயரதன் மனைவியின் மயக்கம் தீரவில்லை. தன் தோழி உரைசெவிசென்று தெளிவொன்றும் கூட்டவில்லை. வினவினள் மீண்டும். நலன்

எண்ணும் நங்கையும் தீமொழிகளாலும் கூனியைக்கடிந் தாள் அவள் புன்பொறி நாவை மூடச்சொன்னாள். திரண்டு வந்ததீமைஅரண்டுபோகுமா? அவள் கால்களைப் பற்றியது. நெஞ்சைப்பற்றும் நெறிகளை வகுத்தது. ஒவ்வொன்றாகத் தன் நஞ்சுச்சொற்களை வீசின, அவைதைத்து அவள் உடலில் நஞ்சை விரவியது படிப்படியாக.

கைகேயி கொடுத்த முத்துஆரம் அழகிய வன்தரையைக் குழித்தது: அவள் பழிமொழிகள் கைகேயியின் உள்ளத்தையும் குழித்தன. "பெண்டிர்க் கிரங்கா இராமன் கொடிய வரிசிலையால் அன்று கொன்றனன் தாடகையை", கோசலை வயிற்றுப் பிறந்ததால் நாளை மணிமுடியும் புனைகுவன் அவன்: ஆயின்,

"இறந்திலன் இருந்திலன் என்செய்து ஆற்றுவான்
பிறந்திலன் பரதன் நீ பெற்றதால்" (II: 155)

என்று அவள் சேயின் வீழ்ச்சியைக் காட்டி வெல்ல முயன்றாள்; இணையவளோடு ஒப்பிட்டு அவள்தாழ்ச்சியைக்காட்டி மாற்றமுயன்றாள். முன்புநடந்த நிகழ்ச்சிகளைத் திரித்தாள். கேகய நாட்டுக்குப் பரதனை அனுப்பியது, இராமனுக்கு பரதன் இல்லாதவேளையில் முடி சூட்டிவைப்பதென்னும் குறிப்பை உணர்த்தினாள்; கைகேயி துன்புறினும், கூனி அவள் மாற்றவள் சேடியர்க்கு அடிமை பூண விரும்பாமையைச் சுட்டினாள்.

"சிவந்த வாய்ச் சீதையும் கரிய செம்மலும்
நிவந்த ஆசனத் திருப்ப நின்மகன்
அவந்தனாய் வெறுநிலத்து இருக்கல் ஆனபோது"
(II: 154.)

"கல்வியும் இளமையும் கணக்கில் ஆற்றலும்
வில்வினை உரிமையும் அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற்கேயது
புல்லிடை உகுத்த அமுது ஏயும் போல்" ( II: 162 )

என்றாள்.

பெற்ற தாயினும் பரதன்பால் மிக்க அன்பு உள்ளவள்போல் கூனி பேசினாள்; கைகேயியின் தாய்மை உணர்வைச் சேய்நலன் பேணும் விழைவை மீண்டும் தூண்டினாள்

"தந்தையும் கொடியன்; நல்தாயும் தீயள்; எந்தையே
பரதனே என் செய்வாய்" ( II: 159 )

என ஓலமிட்டாள்; ஒடுங்காமல்,

"பரதனும் இளவலும் பதியில் நீங்கிப்போய்
விரதமா தவம் செயவிடுதல் நன்று" ( II: 156 )

என இடித்துரைத்தாள். கைகேயியின் நெஞ்சில் அது நின்றது; ஆயினும் பண்பாட்டின் கட்டுக்கோப்பு அவளைக் காத்து நிற்க, தீயவுரைகூறும் கூனியைக் கடிந்தாள். உயிரும் பொருளும் அழியினும் முறை திறம்பாது மனுமுதன் மரபு வழிபடும், வெயின்முறைக்குலத்தையும், மயின்முறைக் குலத்தையும், புலச்சித்தையால் யாது கூறினை என வெகுண்டு உரைத்தாள். பரதனுக்கும் கேகயர்கோன் மகளுக்கும் நல்லவல்போல நின்ற கூனியை வெறுத்தனள்.

"எனக்கு நல்லையுமல்லை என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்ல..." ( II: 164 )

என அவள் இழிமனம் சொல்லியவெல்லாம் வெறுத்தாள். தன்பெருமனப் பண்பைச் சொன்னாள்.

"பிறந்தும் இறந்தும் போய்ப் பெறுவதும் இழப்பதும்
புகழ்மேல்
நிறந்திறம்பினும் நியாயமே திறம்பினும் நெறியின்
திறம் திறம்பினும் செய்தவம் திறம்பினும் செயிர்தீர்
மறம் திறம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ"

(II: 165)

எனக் கூறி, அவளை அகலற்கும் ஆணையிட்டாள். அண்டும் தீமை எளிதில் அகலுமோ? அவள் அடிமிடை வீழ்ந்தாள் கூனி. விரைந்துசொல்ல முற்பட்டாள்; நயந்தும் பயந்தும் எடுத்துரைத்தாள். மூத்தவர்க்கரசாயின்; தன்னிலும் இளைய இராமனுக்கு அரசைத் தயரதன் அளித்தல் யாங்கனம் சாலும்; யாவரே யாயினும் நிலை திரியின் மனம் திருகுவரோ! மகன் அரசாண்டால் கோசலைக்குரியதன்றோ அரசு! அவள் உதவியதன்றோ உனக்கும் உன் மகனுக்கும் கிடைப்பது. அரசகுல மகள் இவ்வாறும் வாழ்வதோ? கோசலை இனியாவும் உடையவள்; கைகேயி இலாதவள்; வருந்திவந்து இரப்பவர்க்கும் கைகேயி கோசலையிடம் இரந்துகொடுக்க வேண்டுமோ? நின் சுற்றமும் உற்றவரும் இங்குவரின் இனிக் காண்பது எவர் செல்வத்தை? நின்வறுமையையோ? மாற்றவள் செழுமையையோ? மாற்றவளைக்காட்டிக்காட்டி இவள் தாழ்ச்சி சுட்டியது அவள் செவியில் நின்றது. தன் நிலையின் திரிபு எண்ணத்தை முற்றியது. அவள் சொன் மூட்டம் அறிவை மறைத்தது.

நாளை இராமன் அரசனானால், சனகனுக்காக அவன் செல்வான்; சனகனுக்கும் கேகயத்துக்கும் இகலுண்டு. போர்வரின் கேகயர்வெல்ல இயலுமோ, இராமன் மாதுலன் துணையானால்? நீ அறியின் பழுதில்லை; நின் சுற்றமும் அழிய

வகைசெய்வாயோ! தசரதன் கொடுப்பானாகில், இராமன் ஆள்வானாகில்; அரசு யாவர்க்குஆம்? இராமனாள்வான்! இலக்குவன் ஆள்வான்! பரதனுக்காமோ இப்பாரகம்? அவன் தம்பிக்கு வருமோ ஆட்சி? கைகேயின் உணர்வுகள் எழுந்தன; உளப்பாட்டின் பாங்கு பிறழ்ந்தது; நச்சுத் தீமொழி ஏற்றிய நஞ்சு விஞ்சியது.

"கெடுத்தொழிந்தனை உனக்கரும் புதல்வனை" (II:175) எனத் தீயமந்தரை செப்ப, மூண்ட உணர்வில்பட்டு சிந்தை திரிந்தது; உளப்பாடுஉலைந்தது; பண்பாட்டோடுகொண்ட சமன்பாடு அழிந்தது; பண்பாட்டின் ஈர்ப்பினை உதறினாள். உள்ளியது பெறவிழைந்தனள்; பழி மறந்தனள் நிலையறியாது,

"எனை உவந்தனை இனியை என்மகனுக்கும் அனையான்
புனையு நீண்முடி பெறும்படி புகலுதி என்றாள்"
(II: 178)

கொண்டது முடித்த கூனி மகிழ்ந்து அவளைப்போற்றினாள். அமைச்சரும் வசிட்டனும் சொல்ல மறந்த அருவரங்கள் இரண்டையும் இதமாக நினைவூட்டினாள். சம்பரன் சாய்ந்த போது வென்றிவேந்தன் தயரதன் உவந்தளித்த வரம் ஓரிரண்டு உண்டு என்பதைச் சொன்னாள்.

இராமன் மணிமுடி சூட்டப் பரதனும் தம்பியும் தவமுடிதாங்கிக் கானாள விடுப்பது சிறப்பென்று அவள் சுட்டிய வாசகமும் உண்டு; கைகேயியின் நினைவில் அது பதிந்தும் இருக்கும். அதனை மாற்றிவிடுவதே வரத்தால் வருவதெனக்கொண்டு,

"இருவரத்தினின் ஒன்றினால் அரசுகொண்டு இராமன்
பெருவனத்திடை ஏழிரு பருவங்கள் பெயர்ந்து
திரிதரச்செய்தி, ஒன்றினாற் செழுநிலமெல்லாம்
ஒருவழிப்படும் உன்மகற்கு உபாயம் ஈது என்றாள்"
(II: 182)

கூனியை உவந்து, என்மகற்கு உலகீந்த நீயே அவன் தாயும் ஆதி எனக்கூறி தன் உறுதியையும் கூறினாள் உயர்வு திரிந்த கேகயன்மாது.

"நம்பியை நளிர்முடிசூட்டல்
துன்றுகானகத்தில் இராமனைத் துரத்தல்
இவ்விரண்டும்
அன்றதாம் எனில் அரசன்முன் ஆருயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவென் யான்" (II: 183)

முடிவுகூறித் திரிந்த சிந்தையுடன் தன் மனையுள் கிடந்த அந்த கைகேயியின் வேண்டுதலை மீண்டும் எண்ணினான். என்செய்வான்? தன்விழைவுப்படி வாழும் மனைவி, தன்போல் பொது நோக்கும். உயர்நெறிப்படரும் விழைவும் உடையளாய் இருப்பாள் என்பது அவன் கருத்து. அவளோ பெண் உளப்பாடும், தனிமை எண்ணமும்கொண்டிருந்தாள். கணவனுக்கு ஏற்றமளித்த அவள், வீர உணர்வு மிக்க அவள் ஏனை மனைவியரிலும் தனக்குச் சிறப்பு மிகுதி உண்டுஎனக்கொள்ளல் சாலுவது; அத்தகைய எண்ணமும் அவள் உளத்திரிபுக்கு அடிப்படையாக அமைதல்கூடும். வாய்மை வளங்குன்றா மன்னவன் ஏன்றவரங்களை ஈந்திட விளைந்து வேண்டுவன பகர்ந்திடு என்றான்.

'ஏயவரங்களின் இரண்டின் ஒன்றினால் என்
சேய் அரசாள்வது சீதை கேள்வன் ஒன்றால்

போய்வன மாள்வது எனப்புகன்று நின்ருள்''
( II: 197 )

மந்தரை தீண்டிய விடம்; உடலெங்கும் பரவியநஞ்சு அவள் நாவின் வழிப்பட்டது. துயர நஞ்சு அவனைத்துணுக் குறவைத்தது: வேழமன்னவீரன் அடங்கி மண்ணில் வீழ்ந் தான். உயிரனைய ஒருமகன் கான்போவதா? அவனுல் தாங்க இயலவில்லை. கைகேயிக்கு வந்துற்ற கேடு ஏதும் உண்டோ? ஐயுற்ருன்.

''நீ திசைத்ததும் உண்டோ
பொய்நிலையோர்கள் புணர்த்த வஞ்சுமுண்டோ''
( II: 205 )

மனையாளின் திரிபுக்கு சான்று காண விழைந்தான். நஞ் சோடு நஞ்சான அவள் நெஞ்சம் பொய்கூற அஞ்சுமோ?

''திசைத்ததும் இல்லை எனக்குவந்து தீயோர்
இசைத்ததும் இல்லை முன்ஈந்த இவ்வரங்கள்
குசைப்பரியோய் தரின் இன்று கொள்வேன் அன்றேல்
வசைத் திறன் நின்வயின் நிற்க மாள்வேன்'' (II: 206)

எனத் தன உறுதியைமொழிந்தாள்.

அறத்தின் கொடுமை உணர்ந்தோன் அவளைக்கொல் லவும் கோறவும் விளைந்து நெறி நினைந்து பழியஞ்சி அவளை

''இறுப்பினும் ஆவது இரப்பது என்று எழுந்தான்''
( II: 211)

''நின்மகன் ஆள்வான் நீஇனிது ஆள்வாய் நிலமெல்லாம்
உன்வயம் ஆமேஆளுநி தந்தேன் உரைகுன்றேன்

என்மகன் என்கண் என்உயிர் எல்லா உயிர்கட்கும்
நன்மகன் இந்த நாடிறவாமை நயவென்ருன்'' (II:219)

தீமை, கொண்டதை எளிதில்விட்டுவிடுமோ? இரும்பியல் நெஞ்சத்தாளும் அவன் ஏற்றமும், அறத்தின் ஊற்றம் கருதி அவனே வற்புறுத்த,

"சரந்தாழ் வில்லாய் தந்த வரத்தைத் தவிர்கென்றல்
உரந்தானல்லால் நல்லறமாமோ உரை" (II: 221)

என அவனையே கேட்டனள். புகழும், அறமும் வாய்மையும் போற்றும் அவன் என்செய்வான்?

அரியன யாவும் ஈவேன்; மண்ணை நீகொள், மற்றது மற. சொன்னசொல் இனிமாறேன். பேயும் இரந்தவர்க்கு இரங்கும்; நீ எனக்கு இரங்கல் பிழையோ? என வேண்டிய மன்னவன் மயங்கிவிடுவானே என எண்ணி தந்த வரங்களை நல்கா முனியின் வாய்மை காப்பவர் நின்னையன்றி இனி யாவரே உளர்! என்று அவனை உறுதிப்படுத்தினள்.

நெடியான் நீங்க என் ஆவியும் நீங்கும் கணவனைக் கொன்ற மனைவியர் இலர்; ஆயின் நீஎனைக்கொல்லுதியோ? என மயங்கினன். அவளோ,

''ஊழிற் (பொய்த்தால்) பெற்ருள் உன்னுரை
இன்றே உயிர் மாள்வேன்'' (II: 229)

என மறுமொழி சாற்றினள். அவன்முன்னவர்சொற்காத்த திறனெல்லாம் கூறினள். அறத்தின் திறனைக் கூறியே தீமை அறத்தை வீழ்த்த முயலும். உறுதி குலையாத மன்னவன் பண்பாடும் மரபும் பிறழ நினையாது இறுதி கூறினன்:

''ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என் சேய்வனமாள

மாய்ந்தே நான்போய் வானுலகாள்வென் வசை
வெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மகனோடும் நெடிதுஎன்றான்"
(II: 231)

உணர்வற்று மண்மீது கிடந்தான். தன் திருமகன் அங்கு வந்து நிற்பதையும் காணாது உணர்வழுங்கினன்.

இராமன் தந்தையை நோக்கினன் மீண்டும்; தாயை நோக்கினன் பின்பு; மன்னவன் சொல்லவிழைந்த உரை ஒன்றுளது கூறலாகுமோ எனக் கேட்டனள். அவனும் ஆகுக என்றனன்.

"ஆழிசூழ் உலகெலாம் பரதனே யாள நீபோய்
தாழிருஞ்சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற்
—கொண்டு
பூழிவெங்கான நண்ணிப் புண்ணியப் புனல்களாடி
ஏழிரண்டு ஆண்டின் வாவென்று இயம்பினென்
அரசனென்றாள்" (II: 294)

அதுகேட்டு மகிழ்வெய்தி,
"மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன்
பணியும் கொண்டேன்" (II: 297)

என அவனும் கான்போந்தான். மன்னவனும் வான் போந்தான். மணிமுடி சூடவருவான் என்றெண்ணிய கேகயர் கோன் மகள் மகன் அயோத்தி நகர் போந்தான்.

"தந்தை யாண்டுளன்; எம்முன் யாண்டுளன்" என வினவி நின்றான் பரதன்.

"தேனமர் தெரியலான் தேவர் கைதொழ

வானகம் எய்தினன்" (II: 850)
தேவி தம்பி என்று இருவரோடும்
கானத்தான் இராமன் (II: 856)

என்பதுகேட்டுத் துடித்தனன்; மன்னவன் வாழ மைந்தன் கான்போந்தது ஏன் என வினவினன். தாயும் இயம்பினள். பொறுக்காத அவன்

"தீங்கிழைத்ததனினே தெய்வஞ்சீறியோ
ஓங்கிய விதியினே யாதினே" (II: 867)

எனக்கேட்டான்.

"குற்றமொன்றில்லையேற் கொதித்து வேறுளோர்
செற்றதும் இல்லையேற் தெய்வத்தால் அன்றேறல்
பெற்றவனிருக்கவே பிள்ளை கான்புக
உற்றதென்(பின்னவன் உலந்ததென்)" (II: 870)

கைகேயி இதனை எதிர்நோக்கி இராள். தன்சேய் உளம் தனைப்போல் ஆமென எண்ணி இருப்பாள். பண்பாடு அவன் உளப்பாட்டோடு இயைந்து இருந்தது; அந்த இயைபைக் கைகேயி கெடுத்திருந்தனளே!

தன்வினையைச் சாற்றி மகன் மனம் ஆற்ற நினைந்தாள்.

"வாக்கினல் வரந்தரக்கொண்டு மைந்தனைப்
போக்கினேன்வனத்திடைப் போக்கிப் பாருனக்கு
ஆக்கினேன் அவனது பொறுக்கலாமையால்
நீக்கினன் தன்னுயிர் நேமி வேந்து என்றுள்" (II:861)

பரதன் உள்ளம் குமுறியது.

"மாளவும் உளனெரு மன்னன் வன் சொலால்

மீளவும் உளனொரு வீரர் மேயபார்
ஆளவும் உளனொரு பரதன் ஆகினல்
கோளலது அறநெறி குறையுண்டாகுமோ'' (II: 879)

தாயின் தீச்செயல் பொறுக்க இயலாது; அவளைக் கடியவும் விழைந்து மனம் மாறி ''எந்தை எவ்வுலகுளான் எம்முன் யாண்டையான்'' எனக் கோசலை முன் ஓடித் தன் விழைவு கூறி சூழியுடைத் தாயுடை கொடிய சூழ்ச்சியும் அறிந்து, தவமுடி அளித்துக் கானுக்கு என் தாய்போக்கிய வீரரைக் கொணர்வேன், அவள் மறுத்த முடி அவர்க்குச் சூடுவேன் என முனைந்தான்.

''அன்னவன் தனைக்கொணர்ந்து அலங்கண் மாமுடி
தொன்னெறி முறைமையிற் சூட்டக் காண்டிரால்''
(II: 968)

எனப்பரதன் படை புடைசூழ எழுந்தபோது கேகயி என் செய்வாள்? கிளர் ஞாலமே சுழன்றது.

இனத்தால் உற்ற கேடு, உளத் திரிபால் உற்ற பிழை அகத்து முளைத்த தீமை, புறத்தையும் சுட்டது; அகத்தை யும் அழித்தது.

—✻○✻—

# மொழியமைப்பில் எளிமைப் புரட்சி

—❋○❋—

புலவர். தி. நா. அறிவுஒளி.

தமிழைக் கடுமையான நடையில் அமைக்கும் முயற்சி இடைக்காலத்தில் உண்டாகி நிலவியது. எவ்வளவுக்கு எவ்வளவு ஒரு செய்யுள் புரியவில்லையோ; அவ்வளவுக்கவ்வளவு அப்பாட லின் இலக்கியத் தகுதி உயர்ந்தது என்ற கருத்து நிலவியது. மடக்குக் போலும் சொல்லணிகள் மிகுதியாக அமையஎழுதும்பாட லுக்கே சிறப்பு உண்டு என்ற நிலையிலிருந்த தமிழ் மொழியை எளிமையாக ஆக்கிய அரிய செயல் எளிய முயற்சியன்று. இன்று ஒருகுறிப்பிட்ட ஆளைச் சுட்டிக் காட்டி 'கவிதையில் எளிமை'யை விளைவித்தவர்! அப்படி! இப்படி' எனக் கூச்சலிடக் காண்கிறோம். குறிப்பிட்ட ஆளைப் புகழ்வதே நோக்கமாகக் கொண்ட கூக் குரல் தான் இது. ஒரு மரபைத் திடுமென தாக்க இயலாது என்பதை உலகியலைக் கூர்ந்து அறிந்தவர்கள் நன்கு தெளிவர் அந் நிலையில் இலக்கியத் துறையில் குறிப்பிட்ட ஒருவருக்கு வேண்டுமென்றே விளம்பரம் உண்டாக வேண்டுமென்பதற்காகச் செய்த வீண் புகழ்ச்சியே தவிர வேறில்லை.

தமிழில் எளிய கவிதை எழுத வேண்டும் என்ற புரட்சி யைப் பலர் செயல்வழி செய்திருக்கின்றனர். அவர்கள் தொண்டே நனி போற்றத் தக்கது. அவர்களை அடியொற்றிப் பின்னோடியாக ஏதோ எழுதிய ஆட்களுக்குப் மிகைப் புகழ் சூட்டல் அறியாமை யே தவிர வேறேன்ன? கவிதையில் எளிமை —என்ற நிலையை உருவாக்கியவருள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்கள் 1. வடலூர்

இராமலிங்க அடிகளார், 2. வேதநாயகனுர் 3.* கடிகை நமசிவாயப் புலவர் (எட்டையாபுரம் அரசவைக் கவிஞர்) 4.காவடிச் சிந்து பாடிய அண்ணுமலை ரெட்டியார் 5. சுப்ரதீபக் கவிஞர் 6. அருணுசலக் கவிராயர் ஆகியோரும் வேறு சிலருமாவார்.

இவர்களில் சிலர் நாடோடிப் பாடல்கள், நாட்டு இசைகள் ஆகியவற்றை இலக்கியத் தகுதிக்கு உயர்த்தவும் புதுமுறையில் முயற்சி செய்து, வியக்கத்தக்க வெற்றியும் பெற்றனர் என்பதைக் குறிப்பிட வேண்டும் இசை இலக்கியம்படைத்து யாப்பில் புதுமை படைத்தவர்களும், இசை நாடகம், கவிதை நாடகம் யாத்தவர்களும் இவர்களின் அரிய புதுமைத் தொண்டாகும். எல்லா இலக்கிய ஆக்கங்களும் எளிமையே நோக்கமாகக் கொண்டு தோன்றியன என்பதைக் குறிப்பிடவே வேண்டும்.

இசைப் பாடலில் எளிய மொழியமைப்பும், நடோடிக் கலை மரபை- இலக்கிய மரபாக்க முயன்ற வெற்றி முயற்சியும் வடலூர் இராமலிங்க அடிகளாராலும், அண்ணுமலை ரெட்டியாராலும், கடிகை நமச்சிவாயப் புலவராலும் மேற்கொள்ளப் பட்டது இலக்கிய வரலாற்றில் வியக்கத் தக்க புரட்சி மலர்ச்சியாகும். இவ்வுண்மையை மறைக்கும் முயற்சி பயனற்றது. உண்மைத் திறனுய்வு இவர்களின் பணியை உலகுக்கு உணர்த்தியே தீரும்.

---

* இவர் கடிகை முத்து புலவரின் மரபினர். எட்டயபுரத்தில் சிறப்புறத் தமிழ் தொண்டாற்றி வாழ்ந்தவர் நமசிவாயப் புலவர். இவரியற்றிய இனிய தமிழ் இலக்கிய இசை நாடகம் வல்லீ பரத நாடகமாகும். எட்டயபுரத்தில் பல கவிவாணரும் போற்றும் தலைமைப் பாவலராகத் திகழ்ந்த சிறப்புடையவர். இராமனூற்று மணிமுத்து புலவரும், வேறு சிலரும் இவரின் மாணவர்களாக இருந்தவர்கள். வல்லீ பரத நாடகத்தில் 214 பாடல்கள், நாடக உரைகளோடு அமைந்துள்ளது. பாடல்கள் இலக்கண வளமும்

இலக்கிய நயமும் பொதுள இசை நயமும், தாளவாய்ப்பும் செழிய அமைந்துள்ளன. சில அவற்றுள் சான்றுக்காக அளிக்கிறேன்.

பல்லவி

கண்டதில்லை நானே—இந்தத்
தாய்போல் தானே! (கண்)

அனுபல்லவி

அண்டம் முழுதும் நவ
கண்டம் முழுதும் கண்டேன்
அங்கும் எங்கும் உள்ள
பெண்கள் அநேகர்க்குள்ளே (கண்)

சரணம்

கண்ணம்பு தொட்டெய்யும்
குனிசிலைப் புருவத்தாள்
கனகத்தைக் கருக்கட்டி
வார்த்திடும் உருவத்தாள்
விண்ணகத் தமுதன்னுள்
யௌவனப் புருவத்தாள்
வேண துரைத்தும் என்சொற்
கிரங்காத கருவத்தாள் (கண்)

---

'வா' வென்கிறீர் ஏதுவேடரே—உமக்கிந்த
வாய்மத மாகாது வேடரே

இடை:

'வா' வென்கிறீர் நீர் யாருங்காணும்?—தாய்மாமன்
மகளோ நான் உமக்கென்ன வேணும்?
நாவொன்றைப் பதனமாய் பேணும்—இங்கே பூச்சி
நடவா தென உமக்கே தோணும்!
நடவாத காரியத்தில்

முடியாத ஆசைவைத்துக்
கடைவாய் புண்ணுகமெத்த
அடடா! ஏதேதோகத்தி ('வா' வென்கிறீர்!)

முதல்

காட்டானை வந்ததுவே—குறமானைக்
காட்டில் பயங் காட்டிக் (காட்)

இடை:

ஓட்டமாய்த் தலையாட்டிக்
கோட்டான்போல் மறிக்காட்டிக் (காட்)

கடை:

கொம்பு கொண்டது முட்டக்
'குட்டுணி' எனத் திட்டத்
தும்பிகையொடு கிட்டச்
சுவாமியை இவள் கட்டக் (காட்டானை)

முதல்:

மானே! நீ இங்கே வாராய்—குற
மானே! நீ இங்கே வாராய்! (மா)

இடை:

தானே மனதிரங்கிச்
சற்றே பரண் விட்டிறங்கி (மா)

கடை:

கூடி நாம் விளையாடக்
குறிஞ்சிப் பூ மலர் சூட
ஊடி மகிழ்ந்து கூட
உருவிலி கண்டொழிந்தோட (மா)

இவ் வல்லீ பரத நாடகம் நாட்டிய நாடகமாகவே பண்டு அமைந்திருந்தது. நடனம், நடிப்பு, இசை, இலக்கியம் என எல்லாவற்றைக்கும் ஏற்ற வகையில் புலவர் இதனை இயற்றிய புலமை மேதைமை நினைத்து நினைத்து உணரத்தக்கது. இத்தகு சிறந்த படைப்புகளை மேடையில், அரங்கில் அறிமுகம் செய்ய வேண்டியது கலைஞர்களின் கடமையாகும். மறை திரையாக ஒளிந்து கிடக்கும் தமிழ்க்கலைச் செல்வங்களை வெளிப்படுத்தித் தொண்டு செய்ய வேண்டியது இளந்தமிழரின் தலைமைப் பணியன்றோ? இவ்வரிய இலக்கிய இசை நாடகத்துக்குப் புத்துயிரீந்து நாட்டில் பரப்ப இசைக்கலைஞர்—நாடகக் கலைஞர் ஆகியோர் முயல வேண்டும்.

'தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே' என்ற இசைப்பா, 'வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்' என்ற பாட்டு, கொம்மியடிப் பெண்கள் கொம்மியடி—இரு கொங்கை குலுங்கவே கொம்மியடி' என்ற நாடோடி இலக்கியப்பா, அம்பலத்திலாடுகின்றார் என்ற கண்ணி, 'நல்ல மருந்திம் மருந்து' என்ற சந்தப்பா, 'இது நல்ல தருணம் அருள் செய்ய' 'கைவிடமாட்டேன் என்று ஊதுதுசங்கே' 'ஆணிப் பொன்னம்பலத்தே' 'அற்புதம் அற்புதமே' 'ஆடியபாதம்' 'வருவார் அழைத்துவாடி' 'இன்னுந்தயவு வர இலையா?' 'தென்டனிட்

---

ஓடி வந்த தகை யார
உன்றனை நான் கட்டிச் சேர
வாடு மனம் களிகூர
மா மோகலகிரி தீர (மா)

எல்லாம் நீயே தஞ்சம்
எண்ணாதே இனிவஞ்சம்
கல்லும் உருகும் கொஞ்சம்
கருங்கல்லோ உன் நெஞ்சம் (மானே)

டேனென்று சொல்லடி' 'அஞ்சாதே நெஞ்சே அஞ்சாதே' 'எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ?' என்ற இசைப்பாடல்களும், 'சூதுமன்னு மிந்தையே' 'கற்றதென்றுஞ் சாகாத கல்வியென்று கண்டு கொண்டு' என்ற கண்ணிகளும் நனிபுது விளைவுகள். இப்பாக்களின் எளிமையைப் பற்றி யாவரும் நன்கறிவர்.

இதுமட்டுமின்றி எண்சீர் விருத்தயாப்பை இன்றைய நிலைக்கு எளிமையும் வாய்ப்பும்நெளிவும்மென்மையும் வாய்ந்ததாக ஆக்கியவர் வடலூர் அடிகளே என்பதை மறத்தற்கில்லை.

''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த
குளிர்தருவே! தருநிழலே! நிழல்கனிந்த கனியே!
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே!
உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே!
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங் காற்றே!
மென்காற்றில் விளை சுகமே! சுகத்திலுறும் பயனே!
ஆடையிலே எனைமணந்த மணவாளா! பொதுவில்
ஆடுகின்ற அரசே! என் அலங்கல் அணிந்தருளே!''
'காடுவெட்டி நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டுக்
கரும்பைவிட்டுக் கடுவிரைத்துக் களிக்கின்ற வுலகீர்!
கூடுவிட்டுப் போயினபின் எதுபுரிவீர் எங்கே
குடியிருப்பீர் ஐயோ! நீர் குறித்தறியீர்! இங்கே
பாடுபட்டீர்! பயனறியீர்! பாழ்க்கிறைத்துக் கழித்தீர்.
பட்டதெல்லாம் போதும் இது பரமர் வரு தருணம்
ஈடுகட்டி வருவீரேல் இன்பமிகப் பெறுவீர்
எண்மையுரைத்தேன் அல நான் உண்மை உரைத்தனனே.''

அறுசீர் விருத்தத்திலும் அடிகள் யாப்பெளிமையும், தெளிவும் பிளிர அமைத்தனர். அம் முறையே இன்றளவும் பயில்வதையும் உன்ன வேண்டும்.

அதுமட்டு மின்றி ஆசியாப் பகுதியிலே கோனட்சியை எதிர்த்து விடுதலை முழக்கம்செய்த முதல் புரட்சிக்கவிஞர் நம் வடலூர் வள்ளலாரேயாவார் என்ற உண்மையை உலகம் உணர வேண்டும். இந்தியாவின் முதல் நாட்டுக் கவியும் (National Poet) மக்கள் கவிஞரும் (People's Poet) நம் வள்ளலாரே என்பதையும் நேர்மையோடு ஒப்பவேண்டும். இந்தியப் பெரும்பரப்பில் ஆங்கிலேயருக்கு எதிராக முதலில் ஆட்சியை எதிர்த்துப் பாட்டிசைத்த உரிமைப் புலவர்—விடுதலைக் கவிஞர்—புரட்சிச் செம்மல்—சீர்திருத்தமேதை—நம்மருமை வடலூர் இராமலிங்க அடிகளாரே என்பதை உணர வேண்டும்

வியப் பளிக்கும் இவ்வுண்மை நனிசீரிய மெய்யுண்மை.

''கருணை யிலா ஆட்சி கடுகி ஒழிக!
அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க—தெருள்நயந்த
நல்லோர் நினைத்த நலம் பெறுக நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து.''

இப் பாட்டு யாரை நோக்கிப் பாடப்பட்டது? யார் ஆண்ட காலத்தில் பாடப்பட்டது? ஆங்கில அரசின் வீழ்ச்சிக்கு நம் வள்ளலாரின் வாழ்த்தன்றோ இது! இவரையன்றோ முதல் புரட்சிக் கவிஞர் எனவும் நாட்டுக் கவிஞர் எனவும் கொண்டாட வேண்டும்.!

மற்றொரு பாடலில்,

''குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ?
குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனோ?''

என்ற பாடல் வரிக் குறைப்பை வற்புறுத்தும் அரசியல் கவிதையன்றோ? இவரை நாம் உண்மையாகத் திறனாய்ந்தறியாமல்லவா வாளாகிடந்தோம்?

இராமலிங்க அடிகளாரின் 'கருணையிலா ஆட்சி' என்ற

பாட்டைவிட, ஓர் ஆட்சியை எதிர்த்து இசைக்கும் புரட்சிப்பாட்டு, நாட்டெழுச்சிப்பாட்டு வேறு ஒன்றுஉண்டோ? இதுவரை அத்தகு பேராண்மைப்பாடல் தோன்றவில்லை. அருளையும், அன்பையும் இரக்கத்தையுமே வேண்டிவேண்டி உருகி உருகிப்பாடிய நல்லுள் ளம் வடலூர் அடிகளின் உள்ளம் என்பதை முதற்கண் நம்முள்ளத் தில் பதிக்கவேண்டும். அத்தகைய சான்றோர் உள்ளம் கொதித்து நாட்டின் கொத்தடிமையை எதிர்த்துப் புரட்சிக்குரல் உயர்த்து வதே நனி வியப்பிற்குரிய செயல்! ஆம். இராமலிங்க அடிகளார் தூயதுறவியாக-சான்றோராக-முற்றுந் துறந்த பற்றற்ற நல்லந்த ணராக இருந்து-அந்நல்லருள் உள்ளத்தோடு, 'கருணை இலா ஆட்சி கடுகி ஒழிக!' என முழங்கிய புரட்சி முழக்கந்தான் இந்திய மா நிலத்துக்கும் ஏனைச் சூழல் நாடுகட்கும் விடுதலை நல்கியது என் பேன். இதுபோன்றே அடிகளின் ஏனைய நல்லுள்ளத்து நல்லெண் ணங்களும் நாட்டில் வெற்றிபெறும் என நம்பலாமல்லவா?

கவிதைத் துறையில் எளிமையை உருவாக்கியமை இராம லிங்கரின் தமிழ்வளச்செல்வாக்கைப்போல, கவிதை நாடகத் துறையில் எளிமையுண்டாக்கியவர் மனோன்மணியம் சுந்தரனார் ஆவார். இவர் அடுத்தநிலையில் 'விடுதலைக்கவிஞராக' 'உரிமைப் புலவராக'க் கருதத்தக்கவர். புரட்சிக்குரலின் இரண்டாவது முழக் கம் மனோன்மணியம் நாடகத்தில் பலவிடத்தும் முழங்குவதை உன்னவேண்டும் இந்த உண்மைகளை இருட்டடிப்பு செய்வதில் பயனில்லை. மனோன்மணிய நாடகம் ஓர்உருவக நாடகமாகும். சுந் தரனார் வெள்ளையர்காலத்துப் பேராசிரியர். கல்லூரிப்பணியில் இருந்தவர். நேரிடையாக அரசை எதிர்த்து எழுதவோ, பேசவோ, செயலாற்றவோ இயலாத நிலையினர். அதுமட்டுமன்று

அவர் அரசியலில் ஈடுபட்டவருமல்லர். ஆயினும் அவர் அரசியல் எழுச்சியோடு நாட்டுப் பொதுத் துன்பமாகிய அடிமைத்தளையைச் சாடி வீழ்த்தத் தம் புதுமை நாடகக் காப்பியத்தை உருவகக்கதை ஓவியமாக அமைத்து அதில் வியக்கத்தகு வெற்றியும் பெற்ற பெருமாண்பு போற்றி உணர்வதற்குரியதாகும்.

ஆசிரியர் சுந்தரனார் சீவகவழுதியின் மறவுரைச் சொற்பொழிவுவாயிலாகப் பெரியதொரு உரிமைப் புரட்சி உரையே நிகழ்த்தியுள்ளார். அது கதையை மட்டும் குறிக்காமல் அக்கால இந்தியநாட்டையே குறிப்பதை ஆழ்ந்து ஆராய்வோர் தெளிவர்.

"வேற்படைத் தலைவரே! நாற்படை யாளரே!
கேட்பீர் ஒருசொல்! கிளர்போர்க் கோலம்
நோக்கியாம் மகிழ்ந்தோம்; நுமது பாக்கியமே
பாக்கியம். ஆ! ஆ! யார்க்கிது வாய்க்கும்?
யாக்கையின் அரும்பயன் வாய்த்திங் குமக்கே?
தாயினும் சிறந்த தயை பூண்டிருந்த நும்
தேயமாம் தேவிக்குத் தீவினை யிழைக்கத்
துணிந்தஇவ் வஞ்சகரை எணுந்தொறும்
எணுந்தொறும்
அகந்தனில் அடக்கியும் அடங்கா தெழுந்து
புகைந்துயிர்ப் பெறியப் பொறிகண் பொரிய
நெடுந்திரட் புருவம் கொடுந்தொழில் குறிப்ப
வளங்கெழு மீசையும் கிளர்ந்தெழுந்து ஆடக்
களங்கமில் நும்முகம் காட்டுமிச் சினத்தீ
கண்டுஅப் பாண்டியே கொண்டனள் உவகை.

அலையெறிந்திதோ ஆர்த்தனள். கேண்மின்!
முலைசுரந் நூட்டிய முதுநதி மாதா!
ஒருதுளியேனும் நீர் உண்டுளீர் ஆயின்
கருதுவீர் தாம்பிர பன்னியின் கட்டுரை
"மக்காள்! அருந்தி வளர்மின்! நுமக்கு
மிக்கோர் இல்லா வீரமாய்ப் பரந்து
முதுசுதந் தரத்தின் முத்திரை ஆகி
இதுபரிண மித்துஉம் இதயத் துறைக!
அன்னியன் கைப்படா இந்நீர் கற்பிற்கு
இழிவுறின் மார்பினின் றிதுவே சோரியாய்ப்
பொழிகநீர் பொன்றிடும் அளவும்!" என்றன்றே
வாழ்த்தி நுந்தமை வளர்த்தினள்? அவள்உரை
தாழ்த்தாது இவண்நீர் போர்த்த போர்க்கோலம்
பார்த்தாள் ஆர்த்தவள் வாழ்த்தாது என்செய்வாள்?

எப்படிப்பட்ட ஒப்பற்ற 'ஆண்மை உரை' இது! இன்னும் உணர்ச்சிக் கடலாக நாடகக் கவிஞர் பேசுவது பெருவிருந்தாகும். அவரின் தமிழ்மொழிப்பற்றின் அருமையையும் காட்டுகிறது.

(தொடரும்)

## சங்கச் செய்திகள் :



வீ. சண்முகசுந்தரம் M. A., B. L.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செயலாளர் வி. சண்முகசுந்தரம் அவர்கள் கடந்த 9-7-65இல் காலமானுர்கள். அவரின் தொண்டு அளவிடற்கரிது.

அவர், 1949லிருந்து 1951வது வருடம் வரை முதுகுளத்தூர் தொகுதி சென்னை சட்டமன்ற உறுப்பினராக இருந்துவந்தார்.

1952லிருந்து 1956வது வருடம் வரை மதுரை ஜில்லா பப்ளிக்பிராஸிகியூட்டராக இருந்துவந்தார்.

1957லிருந்து 1056வது வருடம் ஜூலைமாதம் 8-ந் தேதிவரை இராமநாதபுர மாவட்ட அரசினர் வழக்குரைஞராகவும் இருந்துவந்திருக்கிறுர்.

சுமார் 15 வருடகாலமாக இராமநாதபுர மாவட்ட

செஞ்சிலுவைச் சங்கம், ஹிந்து குஷ்டரோக நிவாரண சங்கம், டியூபர்குளாஸிஸ் அஸோஸியேசன் மாவட்ட க்ஷேம நலநிதி முதலிய சங்கங்களின் காரியதரிசியுமாக இருந்து வந்திருக்கிறார்.

இராமநாதபுரம்மாவட்டம் முதுகுளத்தூர் தாலூகா எஸ். தரைக்குடி குரூப் வாலம்பட்டி என்ற சிற்றூரில் 1908–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26–ஆம் தேதி வீரபத்திரபிள்ளை – சாளிமுத்தம்மாள் இருவருக்கும் மகனாகப் பிறந்தவர். இவருக்கு உடன் பிறந்த சகோதரர் ஒருவர். ஆண்குழந்தைகள் 6. பெண் குழந்தை 1.

இராமநாதபுரம் இராஜா சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் எஸ். எஸ். எல் சி. வரையிலும், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பி ஏ. வரையிலும் எம். ஏ. சென்னையிலும் எல். எல். பி. பம்பாயிலும், பி. எல். திருவனந்தபுரத்திலும் படித்துவந்திருக்கிறார்.

ஆண் குழந்தைகளின் பெயர்கள்:

எஸ். பரசுராமன்,
எஸ். பாலசுப்பிரமணியன்,
எஸ். சுவாதிபாண்டியன்,
எஸ். வேல்பாண்டியன்,
எஸ். சிவசாமி,
எஸ். சிவகுமார்.
மறைவு: 9—7—61.

பெண் குழந்தையின் பெயர்: எஸ். தனலெக்ஷ்மி.

மனைவி: எஸ். சரஸ்வதியம்மாள்.

அன்னாரைப் பிரிந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்திற்கு சங்கச் செயற்குழு தன் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

## சங்கச் செயலாளர் உயர்திரு. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் மீது கூறிய இரங்கற் பாக்கள்.

(அன்பு கருணையானந்தா)

முகவைத் துறைமுகத்து முத்தாய்ப் பிறந்தனையால்
தகவைச் சிறக்கவைத்த சண்முக சுந்தரமே!
அகவை அறுபதுக்கே ஆண்டுமூன் றில்லையையா
மகவைப் பிரிபசுவின் மனத்துயரங் கொண்டோமே.

சங்கமே நீகண்ட சண்முக சுந்தரத்தை
இங்கிதமாய் மீண்டுமே என்றுதான் காண்பாயோ
துங்க அரசினரின் தொடர்ந்த வழக்குரைஞன்
மங்களவான் நின்பணிக்கு வருகை தருவானோ?

கடமை புரிவதற்கே காத்திருக்கும் இவ்வுடலே
கடமை முடிந்துவிடில் கடவுளருங் கைவிடுவர்
உடமை பிறர்தமக்கே உதவியுடன் வாழ்ந்திடுதல்
மடையர் இஃதுணரார் மக்களென மறைந்தனையோ

எங்களுடன் எங்கள் இனியதமிழ் வேளுடனே
பொங்கும் பழநியப்பப் புரவலனார் தம்முடனே
சங்கத் தமிழ்ப்பணியே சால்புறநீ செய்துவந்தாய்
எங்களித யங்குமுற எங்குதான் சென்றனையோ

மாமதுரைச் சங்கமது மன்னிவளர் காலமெலாம்
நீமதுர மயமாக நெஞ்சில் குடியிருப்பாய்
சேமமெலாம் ஓங்கிவளர் செந்தமிழ்க் கல்லூரி
நாமமுயர் தமிழ்ச்சங்க நலங்கருதிப் போற்றுதுமே.

# மதுரைத் தமிழ்ச் சங்க தனித் தமிழ் தேர்வு முடிவுகள் - 1965.

—❀○❀—

## புலவர் நுழைவு—1965.

முதல் வகுப்பு: 225 232 234 268 274.

இரண்டாம் வகுப்பு: 14 18 23 54 67 75 79 88 91 94 99 181 183 203 206 210 224 229 231 247 251 253 257 261.

மூன்றாம் வகுப்பு: 1 4 7 9—13 16 19 20 22 25 27 31 32 47—49 51 52 55 58—60 63 66 68—72 74 76—78 80 81 83 87 90 92 93 95 96 98 100 101 112 114 120 123 125 126 128 129 131 133 134 136 139 140 147—152 156 157 162 163 171—174 177 180 182 184—186 191 192 198—200 204 205 207—209 211—213 216 218 219 221 227 228 230 236 248 252 254 256 258 263 264 266 269 275—277.

## இளம்புலவர்—1965.

முதல் வகுப்பு: இல்லை.

இரண்டாம் வகுப்பு: 11 13—15 25 193 197.

மூன்றாம் வகுப்பு: 1 2 4 5 9 12 16—19 22—24 26—30 33—39 41—43 45—47 49—51 53 57 60 63 69 71 72

73 75 76 80 83 85 90—94 96—101 103—105 107—110 113 120 121 124 126—133 135—137 139 142—145 147—152 158 161 166—168 173 175 178 180—182 189 191.

**புலவர்—1965.**

முதல் வகுப்பு: இல்லை.

இரண்டாம் வகுப்பு: 54 மட்டும்.

மூன்றும் வகுப்பு: 2 4—17 20—22 24 26 30 31 34 35 37—39 42 43 45 47 49 52 53 55 57 58 65—68 70 71 73—76 78 81 84 93—95 99 102—106 108 110 113 115 118 121 121B 121C 121D 125 126 130.

—✻—

## மதிப்புரை

[மேக சந்தேசம்: தமிழாக்கம் 'ஜமதக்னி' கிடைக்குமிடம்:- சாந்தி நிலையம், 9, சேணியம்மன்கோவில்தெரு, சென்னை-21]

காளிதாசனின் 'சாகுந்தல நாடகம்' உலகப்பிரசித்தி பெற்றது. அவனெழுதிய காவியமே இம் 'மேகவிடு தூது' மூலநூலின் சுவை குன்றாது தமிழ்க் கவிதைகளாகவதனை ஆசிரியர் மொழி பெயர்த்திருக்கிறார். ஒவ்வொரு கவிதைக்கும் விளக்கமும் அதன் அணிகலன்களையும் வடமொழி பெயர்களோடு எடுத்துக்காட்டியிருப்பது ஆசிரியரின் வடமொழிப் புலமையை நன்கு எடுத்துக்காட்டுகிறது. காளிதாசனைப் பற்றிய வரலாறும் காலமும் ஆராய்ச்சிசெய்யப்பட்டு நூலின் முற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது பயனுடைய ஒன்றாகும். அறுசீர் விருத்தங்களால் இலக்கண அமைதியோடு அழகுறப் பாடப்பட்டுள்ள நூலின் சுவையை படித்தவர்தாம் அனுபவிக்கமுடியும். படித்துப்பாருங்கள்.

—புலவர். மு உலகநாதன்.